விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 27 செவ்வாய்க்கிழமை (13.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 268

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஐ.நாவில் நேரடிச் சமர்

# நவநீதம்பிள்ளை முழக்கம்

# மகிந்த சமரசிங்க பதிலடி!!



(ஜெனீவா)

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் 18ஆவது கூட்டத் தொடரில் பெருந்தோட்டத்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க வுக்கும், ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணை யாளர் நவநீதம்பிள்ளைக்கும் இடையில்கடும்வாக்குவாதங்கள் இடம்பெற்றுள்ளன. (19 ஆம் பக்கம் பார்க்க)




## பிளேக் இன்று யாழ். வருகை

தெற்கு மற்றும் மத்திய ஆசிய நடவடிக் கைகள் தொடர்பான அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் பிளேக் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கத்தை மாவட்டச் செயலகத்தில் முற்பகல் 10.30 மணியளவில் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

அதன்பின்பு யாழ்.பல்கலைக்கழகத்துக்கு விஜயத்தை மேற்கொண்டு மாணவர்களு டன் கலந்துரையாடவும் உள்ளார். (எ-6)

## பிரான்ஸில் அணு உலை திடீர் வெடிப்பு!

(பாரிஸ்)

பிரான்ஸில் அணு உலை ஒன்றில் நேற்று ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் பலி யானதுடன் நால்வர் காயமடைந்துள்ளனர். எனி னும் இந்த அணு உலைக்கு வெளியே கதிர்வீச்சு கசிவு எதுவும் ஏற்படவில்லை என பிரான்ஸின் அணுசக்தி பாதுகாப்பு கண்காணிப்பு அமைப் பான ஏ.எஸ்.என்.நியூக்கிளியர் தெரிவித்துள் ளது.

பிரான்ஸின் தென் பகுதியில் மத்திய தரைக் கடல் கரையோரத்திலிருந்து 80 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள எவிக்னன் நகரிலுள்ள அணு உலையொன்றிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இவ்விபத்துக்கான காரணம் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

உலகில் மிக (19 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்த்தத்துக்கு சென்ற இணுவில் இளைஞன் நீரில் மூழ்கிப் பலி

தொண்டைமானாறு கடலில் மூழ்கி இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இணுவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த இராஜ மனோகரன் மகிதன் (வயது- 23) என்ற இளை ஞரே உயிரிழந்தவராவார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த இளைஞர் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடை பெற்ற தீர்த்தத் திருவிழாவில் கலந்து கொள் வதற்காக நண்பர்களுடன் கோயிலுக்கு அதி காலை புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அங்கு 6.30 (19 ஆம் பக்கம் பார்க்க)

## பிளேக்குடனான சந்திப்பு திருப்தி தமிழ்க் கூட்டமைப்பு தெரிவிப்பு

அமெரிக்காவின் ஆசிய மற்றும் தென் மத்திய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

கொழும்பு நட்சத்திர விடுதி ஒன்றில் நேற்று காலை 7 மணியளவில் இடம்பெற்ற இச்சந் திப்பு திருப்திகரமானதாக அமைந்ததாக சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சுமார் ஒன்றேகால் மணித்தியாலம் இடம் பெற்ற இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந் திரனும் கலந்து கொண்டிருந்தார்.

றொபேர்ட் ஓ பிளேக்குடன் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் பற்றீசியா பூட்டனிஸும் அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் போல் காட்டரும் கலந்து கொண்டிருந்தனர்.

இச்சந்திப்பில் இலங்கையின் இனப்பிரச் சினைக்கான அரசியல் தீர்வு, அரசாங்கத் துடனான பேச்சுவார்த்தை, வடக்கு கிழக்கின் மனிதவுரிமை விவகாரங்கள், இராணுவ மய மாக்கல் மற்றும் நில அபகரிப்பு குறித்து கலந் துரையாடப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் (19 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புடன் அரசு வெள்ளியன்று பேச்சு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அர சாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தை வரும் வெள்ளியன்று நடைபெறவுள்ளது.

ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக்கிற் கும் ஜனாதிபதிக்குமிடையிலான சந்திப்பின் போது இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பினருக்குமிடையிலான ஆக்க பூர்வமான பேச்சுக்கள் இடம்பெறும் என உறு தியளித்ததாக வெளிவிவகார அமைச்சர் பேரா சிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார். கூட்டமைப் புடனான இப்பேச்சின்போது பல முக்கிய விடயங்கள் பேசப்படும் எனவும் பிளேக்கிற்கு ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். (ச)

## வடக்கில் இராணுவ மயப்படுத்தலா?

## பிளேக்கின் கூற்றுக்கு ஜனாதிபதி மறுப்பு

வடக்கில் இராணுவ மயப்படுத்தல் இல்லை. ஏனைய இடங்களைப் போன்றே வடக்கிலும் இரா ணுவ முகாம்களே உள்ளன என ஜனாதிபதி தெரி வித்தார். அமெரிக்க இராஜாங்கச் செயலர் றொபேர்ட் ஓ பிளேக்கின் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையி லேயே அவர் இதனைக் கூறினார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவிற்கும் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகார ங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக்கிற்கும் இடையிலான நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பில் றொபேர்ட் ஓ பிளேக் ஜனாதிபதியிடம் கேட்டறிந்ததாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நவம்பர் மாத நடுப் பகுதியில் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளியாகும் என உறுதியளித்த ஜனாதிபதி, குறித்த அறிக்கைக் கிணங்க அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்ததாக அவர் குறிப்பிட்டார்.

வடக்கில் இராணுவ மயப்படுத்துவதாக பிளேக் தெரி வித்த கருத்தை ஜனாதிபதி நிராகரித்தார். ஏனைய பகுதிகளை போன்று வட பகுதியிலும் இராணுவ முகாம் கள் இருக்கின்றன. (19 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவ காரங்களுக்கான அமெரிக்காவின் உதவி ராஜாங்கச் செயலர் றொபேர்ட ஓ பிளேக் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். பிளேக் 3 நாள் விஜயம் மேற்கொண்டு நேற்றுக் காலை கொழும்பை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது. பிளேக்கை ஜனாதிபதி வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பஸ்ஸில் பாலியல் தொந்தரவு மேற்கொண்டவருக்கு சிறை!

(கொழும்பு)

பஸ்ஸில் பயணம் செய்த ஜப்பானிய பெண்ணை பாலியல் தொந்தரவு செய்த குற்றச்சாட்டை ஒப்புக் கொண்ட நபர் ஒருவருக்கு கொழும்புக் கோட்டை நீதவான் லங்கா ஜெயரட்ண 7 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 8 மாத கால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இந் நபருக்கு 1500 ரூபாய் அபராதமும் விதித்த நீதிபதி இந் நபரின் கைவிரல் ரேகையை பதிவு செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கொழும்பு 2, யூனியன் பிளேஸ் பகுதியில் பஸ்சில் பயணம் செய்த போது இந் நபர் தன்னை பாலியல் தொந்தரவுக்குட்படுத்தியதாக இப் பெண் புகார் செய்திருந்தார்.

குருநாகல் நாரம்மலயைச்சேர்ந்த இந்நபர் நீதிமன்றில் சிறைச்சாலை அதிகாரிகளால் ஆஜர் படுத்தப் பட்டபோது அவர் அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் ஒப்புக் கொள்வதாக அவரின் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்ததுடன் அவருக்கு குறைந்த தண்டனை விதிக்குமாறும் கோரினார்.

தனது சாட்சிக்காரர் திருமணம் ஆகியவர் எனவும் ஒருபிள்ளையின் தந்தை எனவும் அச்சட்டத்தரணி கூறினார்.

பஸ்தில் தனக்கு அருகில் அமர்ந்து பயணம் செய்த அந்நபர் தன்னை பாலியல் ரீதியில் தொந்தரவு செய்ததாகவும் தகாத முறையில் தொட்டதாகவும் மேற்படி ஜப்பானியப் பெண் முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார். தான் குறுகியகால விடுமுறையில் இலங்கைக்கு வந்ததாகவும் அவர் கூறியிருந்தார்.

விசாரணைகளின் போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் மது போதையில் இக் குற்றங்களை மேற்கொண்டிருப்பது தெரியவந்தது. (ச)

# பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் ஒருபோதும் மௌனித்திருக்கக் கூடாது;

## ஊடகவியலாளர் அமைப்பு கோரிக்கை!

(கொழும்பு)

தேசிய பாதுகாப்புக் கொள்கைகளால் உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகளிலும் நெருக்கடிகளுக்கு உள்ளான ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் மௌனித்திருக்காது தமக்கான பணிகளை முன்னெடுக்க வேண்டும் என சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளனமும் அதன் ஐரோப்பிய குழுவான ஐரோப்பிய ஊடகவியலாளர்கள் சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த பயங்கரவாத ஒடுக்கு முறைச் சட்டங்களுக்கு எதிரான மாநாட்டிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 11 தாக்குதலின் பின்னர் உருவான பயங்கரவாதத்தின் மீதான போர் என்ற சித்தாந்தமும் அதனையொட்டி உருவாக்கப்பட்ட சட்டங்களும் பல நாடுகளில் ஊடகத்துறையின் மீதே கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாக இம்மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தின் பாதுகாவலாக இருக்க வேண்டிய ஊடகத்துறை மிக முன்னேறிய நாடுகளில் கூட அதன் பணியைச் செய்ய விடாது முடக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடக வியலாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் ஜிம்போமெல்லா தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்கள் ஊடகவியலாளர்களை கண்காணிப்புக்குள் வைத்திருக்கும் அதிகாரத்தை சட்டத்தை நடைமுறைப் படுத்தும் அரசாங்க அமைப்புகளுக்கு அளித்திருப்பதாகவும் இந்தமாநாட்டின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

செப்டம்பர் 11 க்குப் பின்னரான ஊடகச் சூழலில் பயங்கரவாதம் தொடர்பான செய்திகளை சுதந்திரமாக வெளிப்படுத்த முடியாதளவுக்கு ஊடகவியலாளர்களின் செயற்பாடுகள் சுருக்கப்பட்டுள்ளதாக 131 நாடுகளைச் சேர்ந்த சுமார் ஆறு இலட்சத்துக்கும் அதிகமான ஊடகவியலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் கூறுகிறது.

அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பான செய்திகளை வெளியிடும்போது தாம் இலக்கு வைக்கப் படலாம் என்ற அச்சத்தால் அவ்வாறான செய்திகளை வெளியிடுவதை ஊடகவியலாளர்கள் தவிர்க்க விரும்புவதாக ஐரோப்பிய ஊடகவியலாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (ச-8)

# கடும் அழுத்தங்களை எதிர்கொள்ளும் அரசு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் வாரங்களில் ராஜதந்திர ரீதியில் கடும் அழுத்தங்களை எதிர்கொள்ளப் போவதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் நேற்று ஆரம்பமான ஐக்கிய நாடுகள்சபை மனித உரிமைகளின் ஆணைக் குழுவின் 18ஆவது கூட்டத்தொடரில் அரசாங்கம் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ளலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

அரசாங்கம் ஏற்கெனவே சர்வதேச ரீதியில் கடும் அழுத்தங்களை சந்தித்துள்ள நிலையில் இக் கூட்டத் தொடரையும் எதிர் கொள்கின்றது.

இந் நிலையில் கொழும்புக்கு விஜயம் செய்யும் அமெரிக்காவின் ஆசிய மற்றும் தென்மத்திய விவகாரங்களுக்கான பிரதி ராஜாங்க அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் போர்க்குற்றங்கள்மற்றும் மனித உரிமைகள் மீறல் தொடர்பில் சுயாதீனமானதும் நம்கத்தன்மையுடன் கூடியதுமான விசாரணைகள் குறித்து மேலும் அழுத்தங்களைக் கொடுப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ச)

வேலைக்கு ஆள் தேவை
வேலைத் தளம் ஒன்றிற்கு
கணக்கியல் அனுபவமுள்ள
பெண் பிள்ளைகள்
தொடர்பு கொள்ளவும்
T.P.:- 077 9384229
078 6305851
C-4419

# தமிழர்களை புறக்கணித்துவிட்டு யாரும் அரசியல் நடத்த முடியாது

## மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக மக்கள் முன்னணி கொழும்பு மாவட்டத்து தமிழ் மக்களின் ஜனநாயக அரசியல் சக்தி. தமிழ் மக்களையும், எமது கட்சியையும் எந்தவொரு பெரும்பான்மை கட்சியும் உதிரிகளாக நடத்துவதற்கு நாங்கள் இடம் தரமாட்டோம்.

எங்களை புறக்கணித்துவிட்டு எந்தவொரு பெரும்பான்மை கட்சியும் கொழும்பிலே அரசியல் நடத்த முடியாத நிலைமையை நாம் உருவாக்குவோம் என ஜனநாயக மக்கள் முன்னணிதலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகமக்கள்முன்னணியின் கொழும்பு மாநகரசபை வேட்பாளர்கள் எஸ்.குகவரதன், கே.ரீ.குருசாமி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்த பிரசாரக் கூட்டம் கொழும்பு ஆமர்வீதி, பிறைட்டன் மண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய மனோகணேசன்மேலும்கூறியதாவது,

அரசியலில் வெற்றி பெறுவதற்கு பொறுமை கட்டாயம் தேவை. நான் பத்து வருடங்களாக நாடாளு மன்றத்தில் இருந்தேன். இரு வருடங்களைத் தவிர. பெரும்பாலும் எதிர்கட்சியில் இருந்தேன். மூன்றுமுறை ஆளுகின்ற அரசுடன் இணைந்து கொள்வதற்கு எனக்கு அழைப்புவந்தது. 2004 இல் சந்திரிக பண்டார நாயக்க அழைத்தார். 2005 இல் ஒருமுறையும், 2009 இல் ஒரு முறையும் பசில் ராஜபக்ஷ எனக்கு அழைப்பு விடுத்தார்.

அவர்கள் அழைப்பு விடுத்ததில் தவறேதும் கிடையாது. அழைப்புகளைநான்ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அரசுடன் இணைந்து ஆகப் போவது எதுவுமில்லை என்பதால் நான் அவர்களது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை.

அரசுடன் இணைந்து கொண்டவர்கள் எதையும் சாதிக்கவில்லை. எனவேதான் பொறுமையுடன் இருக்கிறேன். பாராளு மன்றத்தில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மக்கள் மனங்களில் வாழ்கிறேன். பொறுமையாக இருந்தால் உரியஇடம், உரிய நேரத்தில் தேடிவரும். புதிதாக பாராளுமன்றம் சென்ற சிலருக்கு பாராளுமன்ற உறுப்பினராக மாத்திரம் இருக்க முடியவில்லை. பாராளுமன்றம் என்பது என்ன என்பதை படிப்பதற்கு முன்னர் சிலருக்கு பிரதி அமைச்சராகி, அமைச்சராகி, ஜனாதிபதி ஆகவேண்டும் என்ற ஆசை வந்துவிடுகின்றது. இப்படியானவர்களின் அரசியல் வாழ்க்கை ஆரம்பமானவுடனையே சடுதியாக முடிவிற்கு வந்துவிடுகின்றது. (ச-8)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

# வேலைக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைக்கு இக்ராட் (ICTAD) C9 ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே சுட்டிக் காட்டப்பட்ட கேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 14.09.2011 - 23.09.2011 பி.ப. 2 மணி வரை
2. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி :- 24.09.2011 நண்பகல் 12 மணி வரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி :- 24.09.2011 பி.ப. 2 மணி
   (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு
5. மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம் மானிப்பாய் என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 2ம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
6. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

| இல. | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | ஏனைய வரி |
|---|---|---|---|---|
| 1 | மாதகல் காடாப்புலம் பகுதியில் கொல்களம் அமைத்தல் | 11500.00 | 1000.00 | 153.60 |

திரு. அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்,
தவிசாளர்,
வலி. தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(சி-4417)

Little Aid
மாணவர்களின் கணணிக்கல்வி மேம்பாட்டுக்காக
பிரித்தானியாவைத் தளமாக கொண்டு இயங்கும்
"லிட்டில் எய்ட்" நிறுவனம் முழுமையான நிதி அனுசரணையுடன்
கோப்பாய் நவமங்கை நிவாத்துடன் இணைந்து நடாத்தும்
• இலவச கணனிப்பயிற்சி வகுப்புக்கள் •
• வயது வேறுபாடின்றி ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றலாம்
• இலவச பாடக்குறிப்புகள் • பயிற்சி முடிவில் சான்றிதழ்கள்
மேற்படி கணனிப்பயிற்சிக்கான இரண்டாம் பிரிவுக்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. விண்ணபதாரிகள் தாங்கள் சுயவிபரக்கோவையை எதிர்வரும் 22.09.2011 க்கு முன்னர் நவமங்கை நிவாசம் (கல்வியற் கல்லூரிக்கு அருகில்) இராஜபாத வீதி, கோப்பாய். என்னும் முகவரிக்கு அனுப்பவும்.
தொடர்புகளுக்கு - 0773103874
வகுப்புக்கள் நடைபெறும் இடம் நவமங்கை நிவாசம் (கல்வியற் கல்லூரிக்கு அருகில்) இராஜபாத வீதி கோப்பாய்

பாடசாலை, பல்கலைக் கழகம் முடித்துவிட்டு
வேலை தேடி களைத்து விட்டீர்களா?
உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்
Tourism, Airticketing
Media and Tourism
Personality Development..
போன்ற துறைகள்சார்
2நாள் பயிற்சி பட்டறை
திகதி- Sep 24,25
வழங்குவோர்
சுற்றுலாத்துறை விரிவுரையாளர்கள்.....
பிரபல வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள்.....
ஊடகவியலாளர்கள்......
விமான சேவை அதிகாரிகள்.
சான்றிதழ் வழங்கப்படும்
அனுமதிக்கு முந்துங்கள்
Nation Popular Travels & Tours
SMS ஊடாக இப்பொழுதே உங்களது விபரங்களை அனுப்புங்கள் Tel - 077 217 59 69
No: 82, Brown Road jaffna
Hot Line: 0214920920
உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி இத்துறைகளில் வேலை வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்காக உங்களை தயார் செய்யுங்கள்.

## இன்று ஒரு தகவல்

# இரு படிப்பினைகள்!

நண்பர் ஒருவர் படித்துக் கொண்டிருந்தார். அவ்வழியாக வந்தவர் "என்ன படிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு அவர், "பகவத்கீதை படிக்கிறேன்" என்றார்.

"அதைப்பற்றி எனக்கு கூறமுடியுமா?" என்று கேட்டார்.

அதற்கு அவர் "ஆம்" எனப் பதிலளித்து அதைப்பற்றி கூற ஆரம்பித்தார்.

''பகவத்கீதையிலே இரண்டு முக்கியமான படிப்பினைகள் உண்டு... அதன் பிரகாரம் நடந்தால், வாழ்க்கை இன்பமாக அமையும்! வெற்றிகரமாக அமையும்!'' என்றார்.

"அது என்ன படிப்பினை சிறிது விளக்கமாகக் கூறுங்கள்..." என்றார்.

அவர் இன்னும் விபரமாக கூறத்தொடங்கினார்.

முதல் படிப்பினை... கீதையின் இரண்டாவது அத்தியாயத்திலே 483 ஆவது சுலோகத்திலே வரும்... 'சமத்வம் யோக உச்யதே' என்பதாகும்.

அதாவது ஒரே சீரான நிலையிலே இருப்பதுதான் யோகம் என்பதாகும்.

எமது உடலைப் பொறுத்தவரைக்கும் இந்தச் சமத்துவம் என்பது இயற்கையாகவே அமைந்துள்ளது.

நாம் கடுமையாக வெயிலில் இருந்தாலும் சரி... அல்லது கடுமையான குளிரில் இருந்தாலும் சரி...உடம்பில் உள்ள வெப்பநிலை மாறுபடுவதில்லை. அது ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்.

அது எப்போதும் ஒரே சமநிலையில் தான் இருக்கும். அப்படி இல்லையென்றால் உடம்பில் ஏதோ கோளாறு என்று அர்த்தம்.

நமது உடம்பினுள் இருக்கிற ஏதோ ஒன்று வெப்ப நிலையை சமத்துவமாக வைத்திருக்க உதவுகிறது.

ஆனால், மனதைப் பொறுத்தவரைக்கும் இந்த சமத்துவம் இருக்கிறது இல்லை..

இன்பம் வந்தால், துள்ளிக்குதிக்கிறோம். துன்பம் ஏற்பட்டால், துவண்டு போகிறோம். இதுமாதிரி வாழ்க்கை இருக்கக் கூடாது.

இரண்டு நிலையிலேயும் நாம் ஒரே மாதிரித்தான் இருக்க வேண்டும். அதுதான் யோகம் என்று கூறுகிறது கீதை.

இதில் இரண்டாவது படிப்பினை அதே இரண்டாம் அத்தியாயத்திலே 50 ஆவது சுலோகத்திலே வரும். 'யோக கர்மஸ¤ கௌசலம்' ஆகும்.

அதாவது செய்வதைத் திருந்தச் செய்தால்... அது யோகம் என்று கூறப்பட்டுள்ளது.

எமது வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் செய்வதைத் திருந்தச் செய்வதில்லை. அரைகுறையாகவே தான் செய்கிறோம்!

குறைவாக ஊதியம் கிடைத்தால் அதற்கு தகுந்த மாதிரி ஒரு வேலை! அதிகமாக ஊதியம் கிடைத்தால் அதற்கு ஏற்றாற்போல் ஒரு வேலை!

சில நேரங்களில் உழைப்புக்குத் தகுந்த ஊதியமும் கிடைப்பதில்லை... ஊதியத்திற்கு தகுந்த உழைப்பும் இருப்பதில்லை!

நிர்வாக ரீதியாக இதைச் சீர் செய்யலாம்... அல்லது போராட்டங்கள் மூலமாக ஒழுங்குபடுத்தலாம்.

ஆனாலும், அதற்காக செய்யும் காரியத்தை அறைகுறையாகச் செய்யக்கூடாது.

கிடைக்கும் பலனைப் பற்றிக் கவலைப்படாமல் எடுத்த காரியத்தைச் சிறப்பாக முடிக்கவேண்டும். அப்படி கெட்டித்தனமாக நிறைவேற்றுவதற்குப் பழகிக் கொள்ள வேண்டும். அதுதான் யோகம்!

இப்படியாக கீதையின் முக்கியமானஇரண்டு படிப்பினைகளையும் தெளிவாக சொல்லி முடித்தார் நண்பர்.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில்,

"இன்பம் வந்தால் அதற்காகத் துள்ளிக் குதிக்காதே!

துன்பம் வந்தால் அதற்காகத் துவண்டு போகாதே!

எப்போதும் ஒரேமாதிரியாக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்!" என்பதாகும்.

அதேமாதிரி... எந்தக் காரியத்திலேயும் செயற்பட்டாலும் செய்வதைத் திருத்தமாகச் சிறப்பாகச் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.

இப்படி நாம் எம்மைத் தயார் செய்து கொண்டால் எமது வாழ்க்கை வெற்றிகரமாக அமையும்.

இப்படியாக, எம்மைத் தயார் செய்ததால்தான் சில சந்தர்ப்பத்தில் வாழ்க்கையில் சிரமம் ஏற்படுகிறது.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# இந்திய உதவியுடன் கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்படும் 101 வீடுகளின் நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்துள்ளன

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்திய வீட்டுத்திட்டத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்ட நிர்மாணப்பணிகளில் கணிசமானளவு பூர்த்தியடைந்துள்ளதாக அந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தில் முன்னோடியாக 1000 வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவற்றில் கிளிநொச்சி மாவட்டத்தில் மொத்தமாக 250 வீடுகளை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கையில் 101 வீட்டுத்திட்டங்களுக்கான நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 81 வீட்டுத்திட்ட நிர்மாணப்பணிகளில் 17 வீடுகளின் நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 50 வீட்டுத்திட்ட நிர்மாணப்பணிகளில் 49 வீடுகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 69 வீட்டுத் திட்ட நிர்மாணப் பணிகளில் 35 வீடுகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் தற்போதே இந்திய வீட்டுத் திட்டத்திற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நடவடிக்கை எதிர் வரும் ஒக்டோபர் மாதமளவில் நடைபெறலாமெனவும் அவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட நிலையில் காணிகள் இல்லாத மக்களுக்கே இந்த வீடுகள் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# சந்தேகநபரை விடுவித்தமை தொடர்பில் தெளிவுபடுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாக கூறப்படும் ஒருவர் திட்டமிட்டு விடுவித்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் தெளிவுபடுத்துமாறு அனுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று அனுராதபுரம் நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமாகிய தரிஜிகா விமலசிறி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. குறித்த சந்தேகநபரை பதில் நீதிவான் ஒருவர் முன்னிலையில் ஆஜர்படுத்தி திட்டமிட்டவாறு விடுவிப்பதற்கு தம்புத்தேகம பொலிஸார் நடவடிக்கை எடுத்தவிதம் தொடர்பில் நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபரை விடுவித்ததாக கூறப்படும் தம்புத்தேகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நீதிமன்றத்தில் ஆஜராகி காரணங்களை தெளிவுபடுத்த வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். தம்புத்தேகம பிரதேசத்தினை சேர்ந்த சிறுமி ஒருவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 105 | 130 | 90 |
| பச்சைமிளகாய் | 90 | 120 | 80 |
| தக்காளி | 30 | 60 | 30 |
| மரவள்ளிக் கிழங்கு | 35 | 50 | 40 |
| கோவா | 30 | 80 | 50 |
| கரட் | 50 | 70 | 70 |
| பூசணி | 25 | 50 | 25 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 40 | 50 | 30 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 100 |
| பெரிய வெங்காயம் | 65 | 90 | 80 |
| பாகற்காய் | 80 | 70 | 110 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 140 | 100 |
| பயற்றங்காய் | 60 | 80 | 80 |
| லீக்ஸ் | 50 | 80 | 50 |
| பீற்றூட் | 15 | 20 | 20 |
| கறிமிளகாய் | 40 | 40 | 40 |
| முருங்கைக்காய் | 70 | 180 | 150 |
| போஞ்சி | 100 | 110 | 90 |
| கத்தரிதம்புள்ள | -- | 20 | 60 |
| கீரை - 1 பிடி | 8 | 20 | 20 |
| தேசிக்காய் | 130 | 180 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 20 | 30 |

# இராசி பலன்

*13.09.2011*
*(ஆவணி 27, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*
*பிரதமை பிற்பகல் 4.56 மணிவரை*
*பூரட்டாதி காலை 7.55 மணிவரை*
*இராகுகாலம் 3.03-4.33 மணிவரை*
*சுபநேரம் 10.33-12.03 மணிவரை*
*மாளயபட்ச ஆரம்பம்,*
*உலக தாய்மார் தினம்.*

**மேடம்** சுப செலவுகள் அதிகரிக்கும், சில காரியங்களை நிறைவேற்ற சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள்.

**இடபம்** புதிய நண்பர்களின் அறிமுகத்தால் பொருளாதார நிலை உயரும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**மிதுனம்** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், தந்தை வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், அரசு வழியில் எதிர் பார்த்த சலுகைகள் வந்து சேரலாம்.

**கடகம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள், மூத்தோரால் ஏற்பட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்புண்டு, திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**சிங்கம்** பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கூறலாம், விரயங்கள் தவிர்க்க இயலாமல் ஏற்படும், வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்ச்சி தேவை, உஷ்ண நிலையான நாள்.

**கன்னி** நட்பு வட்டம் விரிவடையும், மாலை நேரப் பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெண்களின் சுப காரியப் பேச்சுக்கள் சாதகமாக அமையும், கௌரவமான நாள்.

**துலாம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மறைமுக எதிர்ப்புக்கள் குறையும், பழைய பாக்கிகள் வந்து சேரலாம், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

**விருச்சிகம்** இன்பங்கள் இல்லம் தேடி வரலாம், பிள்ளைகளால் பெருமை சேரும் நாள், விருந்து விழாக்களில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும் நாள், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், வாகன மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும், தொழில் வளர்ச்சிக்கு தடையாக இருந்தவர்கள் விலகுவர்.

**மகரம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடைவீர்கள், சகோதர வழி ஒற்றுமையால் பாகப்பிரிவினைகள் தீரும், பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு பலன் பெற வேண்டிய நாள்.

**கும்பம்** நன்மைகள் நடைபெறும் நாள், நல்லவர்களின் தொடர்பு நீடிக்கும், பிறருக்காக பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம்.

**மீனம்** பொருளாதார நலன் கருதி பயணமொன்றை மேற்கொள்வீர்கள், [illegible] மிகுதியான நாள், பெரிய மனிதரின் சந்திப்புண்டு, தெய்வ சிந்தை மேலோங்கும், போசன சுகமுண்டு.

வளவன்

## கும்பாபிஷேகம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை கற்கோவளம் பரந்தலாடி ஐயனார் கோவில் மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிமுதல் காலை 7.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

இதில் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 4.30 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறும். (ஸ்ரீ-12-35)

## காரைநகர் வேணன் உவர்நீர்த் தடுப்பணை 25 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு

(காரைநகர்)

கெயார் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் காரைநகரிலுள்ள வேணன் உவர் நீர்த்தடுப்பணை 25 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

மேற்குறித்த புனரமைப்பு வேலைகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் வேலை ஒப்பந்தகாரரால் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

நீர்ப்பாசனத்திணைக்களத்தால் மேற்படி வேலைகள் மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றதோடு துரித கதியில் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனால் மேற்குறித்த பிரதேச மக்கள் பலர் நன்மையடையவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி பூசை முடிவுற்றதும் *காத்தல் கடவுள்* எனும் விடயம் பற்றி மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் ஆன்மீகசொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-12-35)

## தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டியில் வெற்றியீட்டிய வீரர்கள் நேற்று கௌரவிப்பு



தேசியமட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகளில் ஆண்கள் பிரிவு உடற்பயிற்சி போட்டியில் முதலாம் இடத்தை வெற்ற ஊர்கா வற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்றுக் காலை யாழ். நகரில் நடைபெற்றது.

யாழ். பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் காலை 8.30 மணியளவில் வீரர்களுக்கு மலர்மாலை அணிவித்து பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் யாழ்ப்பாணம் பிரதான தபால் நிலையம் வரை அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த வரவேற்பு நிகழ்வினை தீவக வலயக் கல்வி, கோட்டக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், கல்லூரி சமூகம், பாடசாலை பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பன ஏற்பாடு செய்திருந்தது. (ஸ்ரீ-6)

## பட்டப்பகலில் கதவினை உடைத்து இருபது பவுண் நகைகள் திருட்டு

(நவாலி)

பட்டப்பகலில் பூட்டியிருந்த வீட்டின் கதவினை உடைத்து தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள வீட்டில் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளர்கள் வெளியில் சென்றிருந்த வேளை தக்க தருணம் பார்த்து இந்தத் திருட்டு சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பத்து இலட்சத்திற்கும் அதிகமான பெறுமதியுடைய தங்க நகைகள் திருடப்பட்டதாக வீட்டின் உரிமையாளரான சிவராசா சிவச்செல்வன் என்பவர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதில் தனது மனைவியின் தாலிக்கொடி, 4 தங்கக் காப்பு, ஒரு சங்கிலி, இரண்டு [illegible]ரம் என்பன திருடப்பட்டதாக முறைப்[illegible]டில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறைப்பாட்டையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பட்டப்பகலில் வீட்டின் கதவினை உடைத்து மேற்கொள்ளப்பட்ட இத்திருட்டுச் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. (ஸ்ரீ-6)

யாழ்.செய்திகள்

## இன்னிசைக் கச்சேரி

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் இன்னிசைக் கச்சேரி பக்க வாத்திய சகிதம் நடைபெறும். (ஸ்ரீ-12-35)

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பெரும் ஆளணிப் பற்றாக்குறை

(கரவெட்டி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதால் பெரும் சிரமத்தின் மத்தியில் வைத்திய சேவை இடம்பெறுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி வைத்தியசாலையில் 50 வைத்தியர்கள் தேவையாகவுள்ள நிலையில் தற்போது 13 வைத்தியர்கள் மட்டும் அங்கு சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேபோன்று 150 தாதிகள் கடமையாற்றிவேண்டிய நிலையில் தற்பொழுது 56 தாதியர்களே பணிபுரிகின்றனர்.

அத்துடன் சிற்றூழியர்கள், பரிசாரகர் போன்றோர் 200பேர்கள் தேவைப்படுகின்ற நிலையில் தற்பொழுது 110பேரே கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேபோன்று அவசரபிரிவு பதவிகளில் உள்ளவர்கள் குறைந்தளவிலேயே கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இவ் வைத்தியசாலையின் ஆளணிப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் கோரிக்கை விடுக்கின்றன. (ஸ்ரீ-2-12-24)

## இரவில் வீடுகளுக்கு கல்லெறியும் விசமிகள்

(கரவெட்டி)

வடமராட்சி வேம்படி, கன்பொல்லை, வளர்மதி ஆகிய பகுதிகளில் இரவு வேளைகளில் தொடர்ச்சியாக வீடுகளுக்கு விசமிகளால் கல் வீச்சு நடத்தப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் மர்ம மனிதர்களின் பீதியில் உறைந்து போயுள்ள மக்களுக்கு மேலும் பீதிக்குள்ளாக்கும் வகையில் இச்சம்பவங்கள் இடம்பெறுவதாக நெல்லியடி பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சம்பவத்துடன் தொடர்புடைய விசமிகளை கைது செய்து உடன் ச[illegible] நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ம[illegible]கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-12-24)

## தொண்டைமானாறிலுள்ள வீடொன்றில் பணமும் நகைகளும் திருட்டு

(உடுப்பிட்டி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கும் வீடொன்றில் நேற்று திருட்டு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மேற்படி வீட்டு உரிமையாளர்கள் தீர்த்தத் திருவிழாவிற்கு ஆலயத்திற்கு சென்ற வேளையில் வீட்டின் கதவினை உடைத்து உட்புகுந்த திருடன் அங்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களைச் சேதப்படுத்தியதோடு 3 இலட்சம் ரூபா பணத்தையும் 12 பவுண் நகைகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் வழங்கியதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2-12-52)


## மின் தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயரழுத்த மின் விநியோக மார்க்கங்களிலுள்ள மின் கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் குறிப்பிட்ட தினங்களில் காலை 8.30 மணி முதல் 5 மணிவரை மின்சார விநியோகம் தடைப்படுமென இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது.

இதில் இன்று கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒருபகுதி மற்றும் ஈவினைப் பிரதேசத்தின் ஒரு பகுதியிலும் நாளை புதன்கிழமை இணுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ்.பட்டணப்பகுதி, உடுவில் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-12)





வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான பாடசாலை மேம்பாட்டுத்திட்டம் தயாரித்தலுக்கான செயலமர்வு நேற்று யாழ். கல்வி வலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண திட்டமிடல் பணிப்பாளர் ஜெனாட் பிரட்லி விரிவுரையாற்றுவதையும் கலந்துகொண்ட அதிபர் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள். என்.குமார்)*

## வித்தகபுரம் மக்களுக்கு...

என்றிப் திட்டத்தில் முதல் கொடுப்பனவு வழங்குவதற்கான பட்டியலில் கையொப்பமிடாதவர்களின் பெயர்ப்பட்டியல் வித்தகபுரம் கிராம சேவகர் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே கையொப்பமிடாதவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிராம சேவகர் அலுவலகத்திற்கு சமூகமளிக்குமாறு கிராம அபிவிருத் திச் சங்க செயலாளர் கேட்டுள்ளார்.

அத்துடன் காசுக்கான வேலைத்திட்டம் நடைபெறுகின்றது எனவும் கலந்து கொள்ளாதவர்களை கலந்து கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)





வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் முல்லை. வலயக் கல்வி அலுவலகம் நடாத்திய முழுநிலா நிகழ்வு நேற்று முன்தினம் மு/ வித்தியானந்த கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் என்.குமார்)

# பார்வையற்றோருக்கு தொழில் பயிற்சிகள்

பார்வையற்றோருக்கு தொழில்பயிற்சி வழங்குவதற்கு இளைஞர் விவகார மற்றும் திறனபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வையற்றோருக்கான சங்கங்களின் பிரதி நிதிகளுக்கும் இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போதே இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கணனி பயிற்சி, அழகு வடிவமைப்பு சுய தொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பார்வையற்றோருக்கு தொழில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் எதிர்காலத்தில் மேலும் பல்வேறு தொழில் பயிற்சிகளை பார்வையற்றோருக்காக அறிமுகப்படுத்துவதற்கு திறனபிவிருத்தி அமைச்சு எதிர்பார்ப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ஜோர்தான் வெளிவிவகார அமைச்சர் நவம்பரில் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

ஜோர்தான் வெளிவிவகார அமைச்சர் நசர் ஜுதே எதிர்வரும் ஒக்டோபர் அல்லது நவம்பர் மாதமளவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் ஜோர்தானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் விடுத்த அழைப்பை அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஏற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜோர்தான் வெளிவிவகார அமைச்சருடன் மேலும் சில அமைச்சர்களும் வர்த்தக சமூகத்தின் பிரதிநிதிகளும் இணைந்து கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் ஒக்டோபர் அல்லது நவம்பர் மாதமளவில் ஜோர்தான் வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# போக்குவரத்து விதிகளை மீறிய சாரதிக்கு அபராதம்

போக்குவரத்து விதிகளை மீறிய குற்றச்சாட்டில் பேருந்து சாரதி ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி மா. கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாக கண்டு 3 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 2 மாத சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-29-24)

# சர்வதேச மன்னிப்புச் சபையின் கருத்துக்களை ஏற்க முடியாது

## நல்லிணக்க ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளியிடப்படும் முன்னர் அது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டிருக்கும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அறிக்கை வெளியிடப்பட முன்னர் இவ்வாறான கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுடன் இக்கருத்துக்கள் ஆணைக்குழுவின் கவனத்தைத் திசைதிருப்பும் செயற்பாடாக அமைந்துள்ளது என நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஷ்மன் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நம்பிக்கைத் தன்மையற்றது என்றும் பக்கச்சார்பானது என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை அண்மையில் வெளியிட்டிருந்த அறிக்கையில் குற்றஞ்சாட்டியிருந்தது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து நாம் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பவில்லை. எனினும் இக்குற்றச்சாட்டுக்களை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என லக்ஷ்மன் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர், நல்லிணக்க ஆணைக்குழு இறுதி அறிக்கையைத் தயாரிக்கும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. இன்னும் 8 வாரங்களில் நாம் இறுதி அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவுள்ளோம்.

இறுதி அறிக்கை தயாரிக்கும் பணிகளுக்கே நாம் முன்னுரிமை அளித்துள்ளோம்.

இந்த நிலையில் சர்வதேச மன்னிப்புச் சபையின் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளித்து காலத்தை வீணடிக்க விரும்பவில்லை.

எனினும் இறுதி அறிக்கை வெளியிடப்பட முன்னர் அது பற்றி மன்னிப்புச் சபை தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது. இறுதியறிக்கை வெளியாக முன்னர் எவ்வாறு அதன் நம்பகத் தன்மை பற்றி மன்னிப்புச் சபையால் கருத்துக்கூற முடியும் எனக் கேள்வியெழுப்பினார்.

இதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டிருக்கும் கருத்துக்களை ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரத் தூதரகம் கண்டித்துள்ளது. (ஸ்ரீ-4)

பனை அபிவிருத்திச் சபை

விலை மனுக்கோரல்

பனை அபிவிருத்திச் சபையின் கீழ்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களை எமது தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள எமது தலைமையலுவலகத்தில் பெற்று 22.09.2011 இற்கு முன்னர் தங்கள் கூறுவிலைகளை பதிவுத் தபால் மூலமோ நேரடியாகவோ ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- முல்லைத்தீவு, முள்ளியவளையில் உற்பத்தி நிலையத்துடன் கூடிய காரியாலயம் மற்றும் வேலி அமைத்தல்.
- வவுனியா மாவட்டம் புளியங்குளத்தில் உற்பத்தி நிலையம் அமைத்தல்.
- ஊற்றுப்புலம், அறிவியல்நகர், மன்னார்– நறுவிலிக்குளம் ஆகியவற்றின் காணிகளுக்கு வேலி அமைத்தல்.

பசுபதி சீவரத்தினம்
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

(சி/4413)




கனவு நனவாகிடும்
வியாபாரம் ஓங்கிடும்
செல்வம் பெருகிடும்
இவை அனைத்தும்
நேஷன்ஸ் லீஸிங் மூலம் கிடைத்திடும்

உங்கள் எண்ணங்களை நிறைவேற்றும் லீஸிங் பங்காளி

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணங்களை இலகுவாகவும் சிறந்த கொடுப்பனவு முறையிலும் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.

அருகிலுள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியை நாடுங்கள்
அழையுங்கள்: (011) 4 791 777
(011) 4 218 218
www.nationstrust.com
Nations Trust Bank PLC - FQ 118

Nations Trust Bank
Nations Leasing

# பொதுமன்னிப்பு அடிப்படையில் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு கோரிக்கை



நாட்டில் அனைத்து சிறைச்சாலைகளிலும் சிறைவைக்கப்பட்டுள்ள அரசியல்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்க கோரி சர்வதேச கைதிகள் தினமான நேற்றைய தினம் 10 மாவட்டங்களிலிருந்தும் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேற்படி மகஜரின் பிரதிகள் 10 மாவட்டங்களிலுமுள்ள மறைமாவட்ட ஆயர் இல்லங்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் திருமதி சுபத்திரா தேவதாசன், இந்த மகஜரை யாழ்.மாவட்ட உதவி அரசாங்க அதிபர் தலைமைப் பீடஅதி காரி ஜே.பரந்தாமனிடம் கையளித்துள்ளார்.

அத்தோடு இதன் பிரதியொன்றை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உபதலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடமும் மாவட்ட செயலகத்தில் வைத்து கையளித்துள்ளார்.

அம் மகஜரில் குறிப்பிடப்பட்ட விடயம் வருமாறு, சர்வதேச சிறைக்கைதிகள் தினமான இன்று இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் எமது உற வுகளின் விடுதலை கோரும், இப்பொது மனுவை யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, பதுளை, நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர்கள் ஊடாக தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம். அரசின் கைதிகளாகிய எமது உறவுகள் கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய அசாதாரண நிலையின் போது அவசரகால மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நாட்டின் பல்வேறு சிறைகளிலும் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். நாட்டில் நீண்டகாலமாக நடைபெற்ற யுத்தம் முடிவுக்கு வந்தபோது அவர்களுக்கும் விடுதலை கிடைக்குமென நாங்கள் மகிழ்ச்சி அடைந்தோம்.

ஆனால் இரண்டு வருடங்கள் கடந்தும் அவர்களின் விடுதலை தொடர்பாக எந்த விதமான முன்னேற்றமும் எங்களுக்குகிடைக்கவில்லை. இது எங்களுக்கு பெரும் மன வேதனையை அளிக்கின்றது.

கல்வி கற்கும் பிள்ளைகளின் எதிர்காலம், கையேந்தும் நிலையிலிருக்கும் குடும்ப பொருளாதாரம் என்பவை உட்பட சிக்கலான பல விடயங்களுக்கு இன்று நாம் முகம்கொடுக்கிறோம். வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத அளவிற்கு, வேதனையை சுமக்கிறோம். [illegible]க்கான நிரந்தர தீர்வை தங்களிடம் எதிர் பார்க்கிறோம். யுத்தத்துடன் தொடர்புபட்ட [illegible]வேறு காரணங்களுக்காக, சிறையில் வாடும் எம் உறவுகளை எங்களுடன் மீளிணைய வழிவகை செய்யுங்கள்.

இறுதி யுத்தத்தின் பொழுது, சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களின் மறுவாழ்விற்கு சந்தர்ப்பம் வழங்கி, அவர்களை விடுதலை செய்கிறீர்கள். இதை நாம் வரவேற்கிறோம். சிறையிலுள்ள எமது உறவுகளுக்கும் இதேபோன்று ஒரு சந்தர்ப்பம் வழங்கி அவர்களையும் பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யுமாறு தங்களை தயவுடன் கேட்டுக் கொள்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-6)

## தும்புத் தொழிற்சாலையில் தீ; 50 இலட்சம் ரூபா நஷ்டம்

(கொழும்பு)

புத்தளம் கல்குளம் பகுதியில் ஏற்பட்ட தீயினால் தும்புத் தொழிற்சாலையொன்றிற்கு பாரியளவு சேதம் ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் பிற்பகல் ஏற்பட்ட இந்தத் தீயினால் 50 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும் தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் ஆரம்பக்கப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (ஸ்ரீ-2)

## தமிழினிக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் அரசியல்துறை மகளிர் பிரிவு தலைவி சுப்ரமணியம் சிவகாமி எனப்படும் தமிழினியை எதிர்வரும் 26 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போதே பிரதம நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழினி மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

சந்தேகநபர் தொடர்பான சகல விசாரணைகளும் நிறைவு பெற்றுள்ளன. இது தொடர்பான அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டிருப்பதாக இதன் போது குற்ற புலனாய்வு துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் மேலதிக நடவடிக்கைகள் குறித்து சட்டமா அதிபரிடம் இருந்து இன்னும் அறிவிக்கவில்லை என்று குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## புகலிடக் கோரிக்கையாளர் பரிமாற்றம் தொடர்பான ஒப்பந்தம் அமுல்படுத்தப்படும்

### அவுஸ்திரேலிய பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

புகலிடக் கோரிக்கையாளர்களை பரிமாற்றிக் கொள்வது தொடர்பில் மலேசியாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அமுல் படுத்தப்படும் என அந்நாட்டு பிரதமர் ஜூலியா கில்லார்ட் தெரிவித்துள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்களை பரிமாறிக் கொள்ளும் திட்டத்தை முன்னெடுக்கவே தமது அரசாங்கம் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மலேசியாவுடன் அகதிகளைப் பரிமாறிக் கொள்ளும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு அந்நாட்டு உச்ச நீதிமன்றம் கடந்த மாதம் தடை விதித்திருந்தது.

படகு மூலம் அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரும் நபர்களை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தம் சட்டத்திற்கு முரணானது என அவுஸ்திரேலியா நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

எனினும் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு விரும்புவதாக பிரதமர் தெரிவித்துள்ளார். பாராளுமன்றில் புதிய சட்டத் திருத்தங்களை அமுல்படுத்துவதன் மூலம் புகலிடக் கோரிக்கையாளர் பரிமாற்றத்தை நடைமுறைப்படுத்த முயற்சிக்க உள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-4)

## சட்டவிரோதமாக திருமணம் செய்த நபருக்கு பிணை

தனது சட்டரீதியான மனைவி வெளிநாட்டுக்கு தொழிலுக்காக சென்றிருந்த காலப்பகுதியில் வேறொரு பெண்ணை சட்ட விரோதமான முறையில் திருமணம் செய்த நபரை நீர்கொழும்பு பிரதான நீதிவான் இரண்டு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய தொழிற்சாலையொன்றின் ஊழியர் ஒருவரே பிணையில் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டவராவார்.

சந்தேகநபரும் அவரது முதல் மனைவியும் சுதந்திர வர்த்தக வலயதொழிற்சாலையொன்றில் தொழில் செய்துவந்த போது இருவருக்குமிடையில் காதல் மலர்ந்துள்ளது.

10.4.1984 அன்று சட்டரீதியான முறையில் இருவரும் திருமணம் செய்து கொண்டுள்ளனர். இரு பெண் குழந்தைகளும் பிறந்துள்ளன.

இந்நிலையில்குடும்ப பொருளாதார நிலையை கருத்திற் கொண்ட சந்தேகநபர் 1996 ஆம் ஆண்டு சவுதி அரேபியாவிற்கு வேலைக்குச் சென்றுள்ளார். 2000 ஆம் ஆண்டு திரும்பி வந்த அவர் சிறிது காலத்தின் பின்னர் மீண்டும் வெளிநாடு சென்றுள்ளார். அங்கு சிறிது காலம் பணியாற்றிய போது சுகயீனம் ஏற்பட்டு நாடு திரும்பியுள்ளார். இதனைத் தொடர்ந்து சந்தேக நபரின் மனைவி வெளிநாடு சென்றுள்ளார்.

அவர் நாடு திரும்பி வந்த போது தனது கணவர் இன்னொரு பெண்ணை திருமணம் செய்துள்ளதை அறிந்து இது தொடர்பாக நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சந்தேக நபரை நீர்கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தபோது தான் செய்த குற்றத்தை சந்தேகநபர் ஏற்றுக் கொண்டார்.

இதனை அடுத்து அவரை இரண்டு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல பிரதான நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கின் தீர்ப்பு வழங்குவது எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## பயணிகளின்றி 20கி.மீ.தூரம் பயணிக்கும் புகையிரதம்

### வருடாந்தம் 20 இலட்சம் ரூபா நட்டம்

(கொழும்பு)

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து மீரிகம நோக்கி இரவு நேர சேவையில் ஈடுபடும் புகையிரதம் காரணமாக புகையிரத திணைக்களத்திற்கு வருடாந்தம் 20 இலட்சம் ரூபா நட்டம் ஏற்படுவதாக அகில இலங்கை புகையிரத ஊழியர்கள் பொதுச் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த புகையிரதம் தினமும் 9.35 இற்கு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து புறப்பட்டு இரவு 11 மணிக்கு மீரிகமயை சென்றடைகிறது. எனினும் பயணிகள் எவரும் இல்லாமல் சுமார் 20 கிலோமீற்றர் தூரம் குறித்த புகையிரதம் பயணிப்பதாக சங்கத்தின் தலைவர் எஸ்.பீ.வித்தானகே தெரிவிக்கிறார்.

இது தொடர்பாக பிரதி போக்குவரத்து அமைச்சர் ரோஹன திசாநாயக்க தெரிவிக்கையில், குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி திணைக்களத்திற்கு ஏற்படும் நட்டத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். (ஸ்ரீ-2)


## மன்னாரில் மீன்பிடி சேவைகள் நிலையங்கள் திறந்து வைப்பு

(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட விடத்தல்தீவு மற்றும் மன்னார் பேசாலை ஆகிய மீனவ கிராமங்களில் தலா 80 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட மீன்பிடி சேவைகள் நிலையங்கள் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கடல் தொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன இதனை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

மேற்படி நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன், உலக உணவுத்திட்ட அதிகாரிகள், கடல் தொழில் அமைப்பின் பிரதி நிதிகள் என பலர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)



வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாதாந்த சஞ்சிகை வெளியீடு நேற்றுமுன்தினம் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் வடமாகாண பண்பாட்டுத்திணைக்கள பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி வடமாகாண ஆளுநரிடம் சஞ்சிகையை கையளிப்பதையும் அருகில் வடமாகாண பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)


# வீதி விபத்துக்களும் அதற்கான அறிவுரைகளும்

மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் கடந்த 2010 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையின் படி 30 இலட்சம் வாகனங்கள் வரை நகருக்குள் நுழைகின்றன. அல்லது நகரிலிருந்து வெளியேறுகின்றன என்றும், ஆண்டுதோறும் நகருக்குள் 8 ஆயிரம் விபத்துக்கள் சம்பவிப்பதாகவும் இவற்றில் 5 ஆயிரம் விபத்துக்கள் அற்ப சேதம் கொண்ட விபத்துக்களெனவும் பதிவேடுகள் காட்டுகின்றன.

கடந்த சில வருடங்களாக வீதிகளில் சேதம் மட்டும் கொண்ட அற்ப விபத்துக்களில் சிக்கிய சாரதிகள் புலன் விசாரணை ஆரம்பிப்பதற்கும் தடைகளை அகற்றுவதற்கும் பொலிஸார் வரும்வரை காத்திருக்கும் சாட்டில் ஏனைய வீதிப் பாவனையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் அவசியமற்ற கால தாமதங்களையும் தடைகளையும் ஏற்படுத்தியதுமல்லாமல் பொது மக்களினதும் ஏனைய வீதிப் பாவனையாளர்களினதும் பொன்னான வேலை நேரம் விரயமாவதற்கும் வாகன உராய்வு தேய்வுக்கும், எரிபொருள் விரயத்துக்கும் மன உளைச்சலுக்கும் வழிசமைத்தனர்.

வீதிகளில் வாகனங்கள் சம்பந்தப்பட்ட சில அற்ப விபத்துக்கள் விளக்கப்படங்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

1. 'A' இடதுபுறமாகச் செல்லத் தவறிவிட்டார்
2. 'A' இடம் கொடுக்கத் தவறிவிட்டார்
3. 'A' போதியளவு இடைவெளி விட்டுச் செல்லத்தவறிவிட்டார்.
4. 'A' இடம் கொடுக்கத் தவறிவிட்டார்.
5. 'A' எவ்வித எச்சரிக்கையுமின்றி பாதையை மாற்றியுள்ளார்.



மேற்படி வாகனம் தடைகளையும் நெரிசலையும் தவிர்ப்பதற்கும் பொலிஸார் விபத்து நடந்த இடத்துக்கு வருவதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்ப்பதற்கும், காப்புறுதிக் கூட்டுத்தாபனங்களுடனும் காப்புறுதிக் கம்பனிகளுடனும் நீதி அமைச்சுடனும் போக்குவரத்து பொலிஸாரால் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இவற்றின் விளைவாகப் வீதிப் பாவனையாளர்களின் நலன்கருதி பின்வரும் நடவடிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இன்று 20 வருடங்கள் கழிந்து விட்ட போதிலும், இப்பொழுது பெரு வீதிகளைப் புதிய மற்றும் இளம் மோட்டார் வாகனமோட்டிகள் இந்நடைமுறைகளைப் பற்றித் தெரியாதவர்களாகவே இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் தெரிந்து கொள்வதற்காக அந்நடைமுறைகள் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

மோட்டார் வாகனச் சட்டத்தின் 161(1) ஆம் பிரிவின்படி சாரதியானவர்

- விபத்து நடந்த இடத்திலேயே உடனடியாக வாகனத்தை நிறுத்த வேண்டும்.
- ஏனைய இயைபான நபர்களுக்கு விபத்துக்கான நபராலோ அல்லது விபத்தானது ஆதனமொன்றுடனோ மிருகமொன்றுடனோ சம்பந்தப்படுமிடத்து அவ்வாதனத்தின்/ மிருகத்தின் உரிமையாளராலோ அல்லது அவற்றுக்குப் பொறுப்பானவராலோ, பொலிஸ் அலுவலராலோ, கிராம சேவை அலுவலராலோ கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் தனது பெயர், முகவரியையும் வாகனச் சொந்தக்காரரின் பெயர், முகவரியையும் வேறு விபரங்களையும் கொடுக்க வேண்டும்.
- விபத்துக்குள்ளானவருக்கு உயிராபத்தாக அமையக்கூடிய காயம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதோடு விபத்துப் பற்றி உடனடியாக சமீபமாகவுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தலும் வேண்டும்.
- ஆட்களுக்குக் காயமோ, சொத்துக்குச் சேதமோ ஏற்படாத அற்பமான விபத்துக்களைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட நபர்கள் ஓர் இணக்கத்திற்கு வந்து, வாகனங்களின் நிலைகளை வீதியில் குறித்த பின்னர், அவ்விடத்திலிருந்து வாகனங்களை அகற்றிச் சென்று ஏனைய வாகனங்கள் செல்வதற்கு இடம் கொடுக்கவேண்டும். அவர்கள் மிகக் கிட்டிய பொலிஸ் நிலையம் சென்று விபத்துப்பற்றி முறையிடலாம்.
- சம்பந்தப்பட்ட நபர் பரஸ்பரம் இணங்கிக்கொண்டு காப்புறுதிக் கம்பனியிடமிருந்து கோரிக்கை செய்தால் பொலிஸாரைக்கொண்டு தமது சான்றைப் பரிசீலித்துக்கொள்ளலாம். பொலிஸார் கூற்றைப் பதிவு செய்வதோடு வாகனங்களுக்கேற்பட்ட சேதம் பற்றிய விபரங்களையும் குறிப்பாக சாரதி உரிமம், காப்புறுதி நிலவரங்கள், அரசிறை உரிமம், தகுதிச் சான்றிதழ் போன்றவற்றையும் சரிபார்ப்பார்.

இத்தகைய நிலைமைகளில் பொலிஸார் புலன் விசாரணைக்காக விபத்து நடந்த இடத்துக்குச் செல்வதில்லை. வீதி விதிகள் பாரதூரமாக மீறப்பட்டுள்ளதெனத் தெரியவந்தால், பொலிஸார் விபத்து நடந்த இடத்தைச் சென்று பார்வையிட்டு புலன் விசாரணை செய்வார்.

- அற்ப விபத்தில் சம்பந்தப்பட்ட நபர் விபத்து நடந்த இடம்பற்றிய புறவுரு வரைபொன்றை பொலிஸாரின் உதவியுடன் சமர்ப்பிப்பர். இது அந்நபர்களினால் கையொப்பமிடப்பட்டு தகவல் புத்தகத்தில் ஒட்டப்படும்.
- தகுதிபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் அத்தகைய வாகனங்களின் கால் மற்றும் கை பிறேக்குகள், விளக்குகள், ஹோண், டயர்கள் என்பனவற்றின் நிலைபற்றி பிரிசோதனை செய்து தகவல் புத்தகத்தில் அது பற்றிப் பதிந்தபின் வாகனங்களை விடுவிக்க வேண்டும்.
- இயந்திரக் குறைபாடுள்ள வாகனங்கள் மோட்டார் வாகனப் பரிசோதகரால் பரீட்சிக்கப்பட்டு கால தாமதமின்றி விடுவிக்கப்பட வேண்டும்.
- பொலிஸார் விபத்துப் பற்றிய அறிக்கைகளை காலதாமதமின்றி காப்புறுதிக் கூட்டுத்தாபனங்களுக்கும் கம்பனிகளுக்கும் கொடுப்பார். இதன் பின்னரே கோரிக்கைகள் தீர்த்துவைக்கப்படும்.
- பாரதூரமாக வீதி விதிகளை மீறியிருந்தாலொழிய பரஸ்பரம் இணங்கிக் கொண்ட அற்ப விபத்துக்களில் சம்பந்தப்பட்ட மோட்டார் சாரதிகளுக்கெதிராக வழக்குத்தொடரப்படமாட்டாது.
- பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விபத்துக்குப் பொறுப்பான, சாரதி பற்றிய விபரங்களையும் விபத்துக்கான காரணங்களையும் பொலிஸ் பதிவேடுகளில் குறித்துக்கொள்வார்.
- காப்புறுதிக் கூட்டுத்தாபனங்களும், காப்புறுதிக் கம்பனிகளும், மூன்றாம் நபர்களின் கோரிக்கைகளைத் தீர்த்துவைக்கும் முன்னர் தவறுபுரிந்த சாரதிகளுக்கெதிராக பொலிஸ் வழக்குத் தொடர வேண்டுமென சாரதியின் அஜாக்கிரதை பற்றிய சான்று கிடைத்தால் காப்புறுதி செய்பவர்கள் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தும்.

இதன் விளைவாக மூன்றாம் நபருக்கு கோரிக்கைகளைப் பெற்றுக் கொடுப்பதில் பெரும் தாமதம் ஏற்படும். இதனைத் தவிர்ப்பதற்காக தமது பிழையை ஏற்றுக்கொள்ளும் சாரதிகளுக்கு அவ்விடத்திலேயே அபராதம் விதிப்பதற்கு வசதி செய்யும் முகமாக மோட்டார் வாகனச் சட்டத்தில் ஏற்பாடுகள் செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இது சட்டசபையின் அங்கீகாரத்திற்காகக் காத்திருக்கின்றது.

**விபத்துப் புள்ளிவிபரம்**

கடந்த சில வருடங்களாக தீவனைத்திலுமுள்ள பொலிஸ் நிலையங்களில் பின்வரும் அற்ப விபத்துக்கள் அறிக்கை செய்யப்பட்டுள்ளன எனப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.


| ஆண்டு | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|
| விபத்துக்கள் | 33,757 | 31,986 | 29,864 | 33,094 | 35,496 |
| அற்ப விபத்துக்கள் | 14,801 | 12,759 | 11,459 | 14,504 | 16,541 |

மேற்படி விபரங்களானது

1. அவசியமற்ற வீதித்தடைகளையும்
2. வாகன நெரிசல்களையும் உராய்வு தேய்வையும்
3. பொது மக்களுக்குப் போக்குவரத்தின் போது ஏற்படும் கால தாமதத்தையும் மன அங்கலாய்ப்பையும் அசௌகரியத்தையும்,
4. அற்ப விபத்தில் சிக்கிய வாகனங்களை விடுவிப்பதில் ஏற்படும் தாமதத்தையும்

**த. பேரின்பநாயகம்**
ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ்மா அதிபர் (போக்குவரத்து)
(D.I.G-Traffic)
தலைவர் -இலங்கை விபத்து தடுப்புச் சங்கம்

5. பொலிஸ் மற்றும் நீதிமன்ற வேலைப்பழுவையும் தவிர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் வீதிப் பாவனையாளர்கள், மோட்டார் வாகனமோட்டிகள், போக்குவரத்து முகாமையாளர்கள், வாகனத் தொகுதிச் சொந்தக்காரர்கள், போக்குவரத்து சபைப் பணிப்பாளர்கள், காப்புறுதிக் கூட்டுத்தாபனங்கள், காப்புறுதிக் கம்பனிகள் ஆகியவற்றின் தகவலுக்காக வழங்கப்படுகின்றன. மோட்டார் வாகனச் சட்டத்துக்கான உத்தேசத் திருத்தங்களைச் சட்ட சபையினர் விரைவில் நிறைவேற்றுவர் என நம்புகின்றேன்.



# அரசியல் தீர்வை வழங்கியிருந்தால் சர்வதேச நாடுகளின் அழுத்தத்திற்கு முகம்கொடுக்கும் நிலை ஏற்பட்டிருக்காது

## ஜே.வி.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

உள்நாட்டில் நிலவும் முக்கியமான பிரச்சினைகளுக்கு அரசு தீர்வு கண்டிருந்தால் இன்று உலக நாடுகளுக்கு வால் பிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது என ஜே.வி.பி.சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமைகளுக்காகவும் ஜனநாயகத்தை நிலைநாட்டவும் ஜே.வி.பி.தொடர்ந்தும் அரசை வலியுறுத்தும் என அந்தக் கட்சியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் 18 ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமாகிய நிலையில் ஜெனீவா மாநாடு தொடர்பாக கருத்து வெளியிடும் போதே ரில்வின் சில்வா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜெனீவாவில் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரின் போது இலங்கைக்கு எதிராக பிரேரணை முன்வைக்கப்படும் எனப் பரவலாகப் பேசப்படுகின்றது. சர்வதேச சமூகத்தின் இந்த நடவடிக்கையில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கு அரசு நாடு நாடாகச் சென்று உதவி கோருகின்றது.

உள்நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டிருந்தால் இவ்வாறானதொரு நிலை அரசுக்கு ஏற்பட்டிருக்காது என்பதைக் கருத்திற்கொள்ள விரும்புகிறோம்.

வடக்கு-கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்கி மனித உரிமைகளை நாட்டில் பாதுகாத்து ஜனநாயகத்தை அரசு நிலை நாட்டியிருந்தால் இன்று சர்வதேச அழுத்தத்துக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. இதைத்தானே நாமும் ஆரம்பம் முதலே வலியுறுத்தி வந்தோம்.

அதேபோன்று அவசரகாலச் சட்டத்தை நீக்கியுள்ள அரசு தொடர்ந்தும் தமிழ் இளைஞர், யுவதிகளைத் தடுத்து வைத்துள்ளது. இவர்களை விடுதலைசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகள் எதையும் உள்நாட்டில் மேற்கொள்ளாமல் உலக நாடுகளின் ஆதரவைத் திரட்ட முடியாது. இதனை புரிந்து கொண்டு அரசு செயற்படவேண்டும் என ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## டெங்கை கட்டுப்படுத்த பாகிஸ்தான் உதவி

(கொழும்பு)

இலங்கையில் டெங்கு பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு உதவி அளிக்க பாகிஸ்தான் முன்வந்துள்ளது.

இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையிலேயே பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணம் இந்த உதவியை வழங்க முன்வந்துள்ளது.

இதன்படி டெங்கு தொற்றுக்கு எதிரான இலங்கை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாக பஞ்சாப் மாகாணம் மருந்துகள் உபகரணங்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களையும் வழங்க முன்வந்துள்ளதாக மாகாண ஆளுநர் ஷகீப் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

## மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்தில் பெண்களுக்கும் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

நவீனமயப்படுத்தப்பட்டுள்ள மன்னார், மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்தில் 60க்கும் மேற்பட்ட பெண்கள் தற்போது பணியாற்றி வருகின்றனர்.

இவர்களுக்கு நாளொன்றிற்கு 600 ரூபாய் முதல் 700ரூபா வரை சம்பளம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உப்பு அள்ளுதல், உப்பு உலரவிடுதல், உப்பு சுத்தப்படுத்தல், பைக்கற்றுக்களில் உப்பு அடைத்தல் போன்ற வேலைகளில் அதிகளவான பெண்கள் ஈடுபட்டுள்ளனர். கடந்த காலங்களை விட தற்போது வேலை கஷ்டமின்றி காணப்படுவதாகவும் இதற்குத் தேவையான சகல வகை இயந்திர உபகரணங்களும் உள்ளதாகவும் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

## சர்வதேசத்திற்கு பொறுப்பு கூறவேண்டிய கடப்பாடு இலங்கைக்கு கிடையாது

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்க தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனீவாவில் நடைபெறுகின்ற ஐ.நா. மனித உரிமைகள் சாசனத்தின் அமர்வில் எத்தீர்மானம் எடுத்தாலும் அதற்கு இலங்கை ஒருபோதும் அடிபணியாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர எச்சரித்துள்ளார்.

இந்த எச்சரிக்கையை மீறி அழுத்தங்களையே தலையீடுகளையோ மேற்கொள்ள நினைத்தால் பாரிய எதிர்ப்பு போராட்டங்களை சர்வதேச நாடுகளும் ஐ.நா.வும் எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சர்வதேச நாடுகளின் தீர்மானங்கள் தொடர்பில் அரசாங்கம் அலட்டிக் கொள்ள தேவையில்லை. சர்வதேசத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு கிடையாது என்றும் அவ் இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எதிராக தீவிரமான முறையில் சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. ஜெனீவாவில் நடைபெறுகின்ற ஐ.நா. மனித உரிமை சாசனத்தின் அமர்வுகளை இலங்கைக்கு எதிரான களமாகப் பயன்படுத்த பல நாடுகள் சூழ்ச்சி செய்கின்றன.

நாட்டின் மனித உரிமை பிரச்சினைகள் மற்றும் ஜனநாயக பிரச்சினை என்பன உள்நாட்டு விடயங்களே தவிர இவற்றில் ஐ.நா. சர்வதேசமோ தலையிடுவதை அனுமதிக்க முடியாது.

எனவே ஜெனீவா அமர்வுகளில் எவ்வகையான தீர்மானங்களை இலங்கைக்கு எதிராக மேற்கொண்டாலும் அவற்றுக்கு ஒருபோதும் அடிபணியப் போவதில்லை.

இவ் அமர்வுகளில் பங்கேற்றுள்ள இலங்கை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சூழ்ச்சிக்காரர்களுக்கு சார்பாக செயற்பட்டு விடக் கூடாது. தீர்மானங்களை மேற்கொண்டு தலையீடுகளை ஏற்படுத்தும் போது அவற்றுக்கு எதிராக கடுமையான போராட்டங்களை முன்னெடுக்கத் தயாராக வேண்டும் எனக் கூறினார். (ஸ்ரீ-2)

## பிரதமரின் புதல்வரின் திருமண அழைப்பிதழ் அச்சிடுவதற்கு 36 இலட்சம் ரூபா செலவு

(கொழும்பு)

புதல்வரின் திருமண அழைப்பிதழ்களை அச்சிடுவதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ன 36 இலட்சம் ரூபாவினை செலவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


பிரதமரின் புதல்வர் அனுராத ஜயரட்னவின் திருமண அழைப்பிதழ்களுக்காக இந்தப் பணம் செலவிடப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னணி அச்சு நிறுவனங்களில் ஒன்றான டாவின்ஸீ நிறுவனம் அழைப்பிதழ்களை தயாரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பித்தளை மற்றும் மர வேலைப்பாடுகளுடன் கூடிய வகையில் இந்த அழைப்பிதழ்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

நாளை மறுதினம் வியாழக்கிழமை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் திருமணம் வைபவம் நடைபெறவுள்ளது.

அழைப்பிதழ்களுக்கே இவ்வளவு செலவிடப்பட்டிருந்தால் ஏனைய செலவுகள் எவ்வளவாக இருக்கும் என அரசியல் வட்டாரத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் தேவைக்கென் அண்மையில் புலம்பெயர்பழைய மாணவர்காளால் போட்டோபிரதி இயந்திரம் ஒன்று கையளிக்கப்பட்டது. இதனை பொறியியலாளர்களான பா.பாலராஜன், பே.சுபநேசன் ஆகியோரின் அனுசரணையுடன் அவர்களது உறவினர்கள் இணைந்து வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க கடற்படையினர் பாரிய பங்களிப்பு

### பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளின் போது கடற்படையினரின் பங்களிப்பு மிகவும் அளப்பரியது என பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையினர் மிகவும் ஒழுக்கமுடையவர்கள் எனவும் திறமையானவர்கள் எனவும் ஐக்கிய நாடுகள் படையினர் ஒப்புக் கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை பாதுகாப்பதற்காக கடற்படையினர் செய்த அர்ப்பணிப்புக்கள் மிகவும் அளப்பரியது என அவர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது பிரதமர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

புறச்சக்திகள் நாட்டுக்குள் ஊடுருவுவதனை தடுப்பதற்கு கடற்படையினர் அளித்த பங்களிப்பு பாராட்டுக்குரியது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

## சட்டவிரோத குடியேற்றவாசிகள் தொடர்பான விசாரணை குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம்

(கொழும்பு)

கிழக்கு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இலங்கையின் சட்டவிரோத குடியேற்றவாசிகள் தொடர்பான விசாரணைகள் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு படகொன்றில் சென்று கொண்டிருந்த போது கைது செய்யப்பட்ட இவர்கள் அனைவரும் வடக்கு-கிழக்கு மாகாணங்களை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த குழுவில் 44 பேர் உள்ளடங்குகின்றனர். இதில் ஒரு பெண்ணும் இரண்டு சிறுவர்களும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# மற்றொரு கோணம்

## உள் நிலை அன்பாகவும் அமைதியாகவும் இருந்தால் பேச்சில் அர்த்தம் இருக்கும்



ஆன்மீகம் 40

நான் ஒன்றை நினைக்கிறேன். வேறொன்றைப் பேசுகிறேன். இதை மாற்ற ஏதும் பயிற்சி உள்ளதா?

பேச்சு, செயல் எல்லாமே சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் இருக்க வேண்டும். நீங்கள் பேசுவது இன்னொருவருக்காகத்தான். உங்களுக்காகவல்ல. உங்கள் பேச்சு, உங்கள் தன்மையை வெளிப்படுத்துவதற்கான ஒரு கருவி. உங்கள் உள் தன்மை எப்படியிருக்கிறதோ அப்படித்தான் உங்கள் பேச்சும் இருக்கும். எனவே பேசும் முறையை சரிப்படுத்த முயற்சிப்பதற்குப் பதிலாக, நம் உள்தன்மையை எப்படி வைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் கவனம் வைத்தால் பயனளிப்பதாய் இருக்கும். உள் தன்மை மிக அன்பாக, அமைதியாக இருந்தால் எப்படிப் பேசுவது என்பதைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. எப்படிப் பேசினாலும் நன்றாகத்தான் இருக்கும்.

உள் தன்மையில் கவனம் கொள்ளாமல், வெளியே நன்றாகப் பேச வேண்டும் என்று நீங்கள் எவ்வளவுதான் கணக்குப்போட்டாலும் அது நன்மையைத்தராது. உங்களுக்கும் நன்மையைத்தராது. மற்றவர்களுக்கும் நன்மையைத்தராது.

அன்பான அமைதியான உள் தன்மையை வைத்துக்கொண்டால், சூழ்நிலைக்கு ஏற்றதாக இருக்கலாம். அப்படியிருந்தால்தான் அந்தப் பேச்சில் ஒரு அர்த்தம் இருக்கும். நமக்குள் நாம் எப்படியிருக்க வேண்டும் என்பதைக் கவனமாகப் பார்த்துக் கொண்டால், எப்படிப் பேசுவது என்பதைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை.



தீவிரவாதி யென்றாலே இஸ்லாமியர்களைக் குறிப்பிடுவது ஏன்?

இந்த உலகத்தில் எத்தனையோ விதமான இயக்கங்களிலிருந்தும் நம்பிக்கைகளிலிருந்தும் தீவிர வாதம் தலைதூக்கி வருகிறது. சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மேலாதிக்கம் பெறவேண்டி முயன்ற எல்லாத் தரப்பும் தீவிர வாதத்தைக் கைக்கொண்டே வந்திருக்கின்றன. ஒரு மதத்தில் ஒரு பிரிவினர் அத்தகைய முயற்சிகளை மேற்கொள்வதனாலேயே அந்த மதத்திற்கு தீவிரவாத முத்திரை குத்துவது பிற்போக்குத்தனமான பார்வை. எல்ல மதங்களும் இந்த உலகத்தை எந்த பேதங்களும் இன்றி ஒன்றாகக் காண கற்றுத் தருகின்றன. மத நூல்களில் வருகின்ற சில வரிகளை வைத்துக்கொண்டு சிலர் செய்கின்ற தவறான பிரச்சாரங்கள் உலகந்தழுவிய அளவில் தீவிர வாதத்திற்கு அடித்தளமாய் இருந்து வருகிறது. சமூகக் காரணங்களுக்காகவும் பொருளாதாரக்காரணங்களுக்காகவும் மத நம்பிக்கைகளைக் காரணமாகக் கொண்டும் தீவிரவாதம் இந்த உலகில் தலைதூக்கி வந்தாலும் கடவுளின் பெயரால் ஏற்படும் தீவிரவாதமே அனைத்தையும் விட ஆபத்தானது. ஏனெனில் கடவுளுக்காக ஒன்றைச் செய்கிறோம் என்று மனிதன் செயற்படத் தொடங்கி விட்டால் அவனது தவறுகள் அவனுக்குத் தெரியாது. குறிப்பிட்ட எந்த ஒரு மதத்தையும் தீவிரவாதம் சார்ந்த மதம் என்று முத்திரை குத்த யாருக்கும் உரிமையில்லை. அதேநேரம் எல்லா மதங்களும் தங்கள் மதத்தில் தலைதூக்குகிற தீவிரவாத்தை வெளிப்டையாகக் கண்டித்து, இதற்கும் தங்கள் சமய நம்பிக்கைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அறிவிக்க வேண்டும்.

ஒவ்வொரு தனி மனிதனிடமும் ஒரு நல்ல அம்சம் உண்டு. ஒரு தீய அம்சமும் உண்டு மதங்களிலும் அப்படித்தான். நல்ல அம்சங்களை மேம்படுத்தவும், தீய அம்சங்களை பெருமளவு கட்டுப்படுத்தவும் தெரிகிறபோதுதான் வாழ்க்கையோ கொள்கையோ அர்த்தமுள்ளதாகிறது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# மட்டக்களப்பு, திருகோணமலை வரலாறு தொடர்பான கர்ண பரம்பறைக் கதைகள்

மட்டக்களப்பு வரலாறு பற்றித் தெளிவான ஆய்வு நூல்கள் எதுவும் வெளிவரவில்லை. "மட்டக்களப்பு மான்மியம்" என்ற ஒரு நூலை காலங் காலமாக, மட்டக்களப்பு அறிஞர்கள் வரலாற்று நூலாக் கருதிப் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்கள். ஆனால், "மட், மான்மியம்" என்பது "மட்டக்"களப்பின் பூர்வசரித்திரம் என்ற பெயரில் மிகமிக அண்மைக் காலத்தில் (கி.பி. 19 ஆம் நூற்றாண்டு) எழுதப்பட்ட ஏட்டுப்பிரதியின் நூல் வடிவமாகும்.

இந்த நூலை "மட்டக்களப்பு மான்மியம்" என்று பெயரிட்டு 1950 களில் வித்துவான் எவ்.எக்ஸ்.சி நடராசா பதிப்பித்தார். இந்த ஏடு மிகப்பழங்காலத்தில் எழுதப்பட்டது என்ற நம்பிக்கை அல்லது கற்பிதம் மிக நீண்ட காலமாக இப்பகுதியில் இருந்து வந்தது. ஆனால், இந்த ஏடு செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை என்பவரால் மிக அண்மைக்காலத்தில் எழுதப்பட்டது என்பதை இவரது மருகர் முறையானவரும், தற்போது கனடாவில் வதிபவருமான கலாநிதி க.தா. செல்வராச கோபால் தெளிவுபடுத்தியுள்ளார். இவ்விபரம் இவர் அண்மையில் எழுதி வெளியிட்டுள்ள "மட். மாவட்டத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடிகளே" என்னும் நூலில் இடம் பெறுகின்றன.

மட்டக்களப்பு வரலாறு பற்றி இதுவரை எழுதியுள்ளவர்கள் தொல்லியல் ஆய்வாளர்களோ வரலாற்று ஆய்வாளர்களோ அல்லர். அவர்கள் அனைவரும் தமிழ் அறிஞர்கள் மட்டுமே. வித்துவான் எவ்.எக்ஸ்.சி நடராசா (மட்.மான்மியம்) வித்துவான், பண்டிதர் வி.சீ கந்தையா (மட். தமிழகம்), தனபாக்கியம் குணபால சிங்கம் (மட்.மான்மிய ஆய்வு) வித்துவான் சா. இ. கமலநாதன் ( மட். மான்மிய ஆராய்ச்சி) இன்னும் இவர்களைப்போன்று மட். மான்மியத்தை ஆதாரமாகக் கொண்டு நூல்களை எழுதிய அத்தனை பேரும் தமிழறிஞர் மட்டுமே.

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

ஆடக சௌந்தரி

"மட்.மான்மியம்" நூலில் உள்ள சில "கதைகள்" வருமாறு

1. ஆடக சௌந்தரி என்பவள் குழந்தையாக இருந்தபோது ஆட்சிக்கு ஆபத்துவரும் என்று ஜோஷியர்கள் சொன்னதைக் கேட்டு அவள் பெற்றோர் (தென்னிந்திய சிற்றரசு ஒன்றைச் சேர்ந்தவர்கள்) அக்ககுழந்தையை ஒரு பேழையில் வைத்து கடலில் விட அப்பேழை தம்பிலுவில்/ திருக்கோயிலில் கடற்கரையில் ஒதுங்க அக்குழந்தையை அப்போது திருக்கோயிலை ஆட்சி செய்த மன்னன் மனுநேயகயபாகு எடுத்து வளர்த்தான். குழந்தை வளர்ந்து பெரியவளானதும் அவளுக்கு "ஆடக சௌந்தரி" எனப் பெயரிட்டு தனக்குப்பின் அவளிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தானாம்.

இதில் நாம் கவனிக்க வேண்டியது, ஒரு குழந்தையைப்பேழையில் வைத்துக் கடலில் விடுவதானால், அது நீர்,காற்று புகாத பேழையாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால் அக்குழந்தை மூச்சுத் திணறி இறந்து விடும் அல்லவா?

அல்லது காற்றுப்புகும் வகையில் திறந்த பேழையாக இருந்தால் கடல், நீர், பேழையில் புகுந்து குழந்தையை மூழ்கடித்து விடும். இது பற்றிய சிந்தனை இல்லாதவர்கள் உருவாக்கிய "அம்புலிமாமா" கதையே குழந்தையைப் பேழையில் வைத்துக் கடலில் விடும் கற்பனைக்கதை. "கர்ணன்" கதையில் குந்திதேவி அவ்வாறு செய்வதாக ஒரு கதை உண்டு அல்லவா? அதன் பிரதிபலிப்பாகவே இத்தகைய கதைகள் உருவாகி இருக்கவேண்டும். இத்தகைய கட்டுக்கதைகள் பல திரைப்படங்களிலும் சிறுவர் கதைகளிலும் நிறைய வெளிவந்துள்ளன. மட்மான்மியம் எழுதியவரும் இக் கதையைத் தன் நூலில் புகுத்தியுள்ளார். ஆனால், வரலாறு எழுதுபவர்கள் இது பற்றிச் சிந்திக்காது விட்டது ஆச்சரியமே.

ஆடக சௌந்தரியும் பூதப்படைகளும்

"பூதப்படைகளைக் கொண்டு, ஆடக சௌந்தரி கந்தளாய் குளத்திற்கு அணை கட்டினாள் என்றும் ஒருகதை "மட் மான்மியத்தில்" இடம் பெறுகிறது. பூதப்படைகள் என்று ஒன்று இருக்க முடியுமா? பூதம் என்பது வெறும் கற்பனை ஆங்கிலத்தில் "Demon' அல்லது "Giant" என்று வர்ணிக்கப்படும் கற்பனைக்கதை இது. இவற்றைக் கட்டி மேய்த்து, சமாளிக்கமுடியுமா? அல்லது "அலாவுதீனும் அற்புத விளக்கும்" கதையில் வரும் பூதம் போன்றவை என்றால் அது கற்பனை என்பது நன்கு தெரிந்த விடயம் அல்லவா?

01

## அன்பு மணி

கந்தளாய்க் குளத்தை மகாசேனன் கட்டினான் என்ற அபத்தமான கதையும் இந்நூலில் இடம்பெறுகிறது. "மகாசேனன்" என்பவன் வாழ்நாள் முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிராகச்செயற்பட்டவன். பல இந்து ஆலயங்களை இடித்துத் தள்ளயவன். அப்படிப்பட்டவன் தமிழ் விவசாயிகள் நன்மைக்காகக் கந்தளாய்க் குளத்தைக் கட்டியிருப்பானா? "மட். மான்மியம்" எழுதியவர் என்ன அடிப்படையில் இக்கதையைப் புகுத்தினாரோ தெரியவில்லை.

(தொடரும்)


# நீரிழிவு நோயின் வகைகள்

❖ சில சமயம் தாய்க்கும் உயிரிழப்பு ஏற்பட வாய்ப்புண்டு.

❖ பிறந்த குழந்தைக்குப் பின்நாளில் நீரிழிவு நோய் வரவும் வாய்ப்புண்டு.

எனவேதான் கர்ப்பிணிகள் நீரிழிவுப் பரிசோதனையை அடிக்கடி மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப் படுகிறார்கள்.

கர்ப்பகாலத்தில் நீரிழிவுநோய் வந்தால் பிரசவம் முடியும்வரை இரத்த





சீனியின் அளவை கட்டுப்படுத்திக் கொள்ளும் வழிமுறைகளை அவசியமாக அறிந்து கொள்ளவேண்டும்.

இதன்மூலம் தாய்க்கும் குழந்தைக்கும் ஏற்படும் பாதிப்புகளை கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளலாம்.

உணவில் சீனி அளவுடன் இருந்தாலோ இயல்பான உழைப்புடன் வாழ்ந்தாலோ நோய் வெளியே தெரியாது. சீனி அளவு சீருடன் இருக்கும்.

ஆனால், மேற்கூறிய காரணங்களால் ஏற்படும் வளர்சிதை வேதியில் மாற்றத்தால் சீனி அளவு அச்சூழலில் மட்டும் கூடி அச்சூழல் விலகியவுடன் குறைந்து சரிப்பட்டு விடும்.




குறிப்பாக கருவுற்ற தாய்மார்களுக்கு இந் நிலை ஏற்படின் அவர்கள் பேறு காலத்தில் மட்டும் மருத்துவம் ஏற்றால் போதும். குழந்தைப் பிறப்புக்குப் பின்னர் சீனி அளவு சரியாகும்.

கட்டுப்படாத நீரிழிவு நோயுள்ள பெண்ணுக்கு சத்திர சிகிச்சையைத் தவிர்ப்பதற்காக பல கர்ப்பிணியின் ஒன்பதாவது மாதத்தில் இருந்தே மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறக் கூறுவார்கள். இதன்மூலம் நீரிழிவு நோயால் வரும் பக்க விளைவை தடுக்கலாம்.

**கணைய நோய், நீரிழிவு நோய்.**

உடற்பயிற்சி மேற்கொள்ளுதல், ஆரோக்கியமான வாழ்வுமுறை போன்றவற்றை மேற் கொண்டிருந்தும் மது அருந்துதல் மற்றும் பிற உடலியல் பாதிப்புகளால் கணையத்தில் அழற்சி, புற்றுநோய் ஆகியவை காரணமாக லாங்கர்ஹான் திட்டுத் திசுக்கள் பாதிக்கப் படுவதால் இன் சுலின் சுரக்கும் திசுக்கள் நேரடியாக தாக்கப்படும்போது அதன் பணிகள் பாதிக்




கப்பட்டு நீரிழிவுநோய் உருவாகி விடுகிறது. இதை நான்காம் நிலை நீரிழிவு என்கிறார்கள்.

பிற நோய்களுடன் துணை நோயாகவோ அல்லது

03




ஏனைய நோய்களுக்காக சாப்பிடும் மருந்துகளின் காரணமாக இன்சுலின் உற்பத்தி பாதிக்கப் படுவதாலோ அட்ரீனல் அல்லது பிட்யூட்டரி சுரப்பிக் கோளாறுகள், மையோடோனிக் டிஸ்டிரோபி எனப்படும் தசை அழிவு நோய் காரணமாகவும் கார்டிகோஸ்டீராய்டுகள் காரணமாகவும் இந்த நிலை தோன்றும்.

பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்,
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
சென்னை.

நீரிழிவு நோயாளர்களில் சுமார் ஒரு வீதமானவர்கள் இத்தகைய பாதிப்புக்கு ஆளாகிறார்கள்.

கணைய அழற்சியால் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரிக்கும்.

இவையெல்லாம் நீரிழிவு நோயின் வகைகள்.





நோய் வருவ தற் கான வாய்ப் புள்ள வர் கள் மரு த்துவப் பரிசோதனை மற்றும் ஆலோசனைகளை முன்னதாகவே பெற முயற்சிக்க வேண்டும். (முற்றும்)




# இருதய நோய்

**இருதய நோய் இளம் வயதினரைத் தாக்குமா?**

ஸ்ட்ரெப்டோ காக்கஸ் என்ற ஒரு வகை பாக்றீரியா கிருமி இருக்கிறது. 5 வயது முதல் 15 வயது வரையிலுள்ள சிறுவர், சிறுமியரை எளிதாக இந்தக் கிருமி தொற்றலாம். இதனால் தொண்டையில் ஏற்படும்




நோய் தொற்றலாம். அவர்களுக்கு எளிதாக ருமாடிக் பீவர் எனப்படும் கீல்வாத காய்ச்சல் நோய் வரக்கூடும். இந்நோயால் பாதிக்கப்படும் பிள்ளைகளுக்குத் தொண்டைப் புண், தொண்டைக்கட்டு போன்றவை ஏற்படும். சில நாட்கள் சென்றபின் கால், கைகளில் உள்ள உட்புறம் பாதிக்கப்படும். பின்னர் இதன் காரணமாக மூட்டுகள் மாறி, மாறி வலித்து வீங்கும். அதையொட்டி கடுமையான காய்ச்சல் வரும். இந்த அறிகுறிகள் தென்பட்டால் உயிருக்கே ஆபத்து நேரிடலாம்.

**மாரடைப்பு எதனால் ஏற்படுகிறது?**

இருதயத்தில் இரண்டு முக்கிய இரத்தக் குழாய்களிலோ அல்லது அவற்றின் கிளை இரத்தக் குழாய்களிலோ சிறுக, சிறுக கொழுப்புச் சத்து அதிக அளவில் சேர்ந்து இரத்த ஓட்டம் அடியோடு நின்றுவிடும்போதுதான் மாரடைப்பு உண்டாகிறது. ஒருவருக்கு இரத்தக் குழாயில் 75 சதவிகிதம் அடைப்பு ஏற்படும்வரை ஒருவரால் அதை உணர்ந்துகொள்ள முடியாது. அதற்குமேல் அடைப்பு உண்டாகின்றபோதுதான் மூச்சுத்திணறல், வாந்தி, வியர்வைப் பெருக்கு, நெஞ்சுவலி போன்றவை நேரிடும். அப்போதுதான் அவரால் உணர முடியும். இரத்தக்குழாய் முழுவதுமாக அடைபட்டு போகும் போதுதான் மாரடைப்பு ஏற்படுகிறது. ஏறக்குறைய 45 வயதுவரையில் பெண்களுக்கு பெரும்பாலும் மாரடைப்பு வருவதில்லை.

**பெண்களுக்கு 40 அல்லது 45 வயதிற்கு மேல் தான் மாரடைப்பு வருகிறது. இது எதனால்?**

பெண்களுக்கு மாரடைப்பு நோய் 45 வயதிற்கு முன் வரை பெரும்பாலும் வருவதில்லை. ஏனெனில் ஈஸ்ட்ரோஜன் என்கிற ஓமோன் அவர்களது இருதயத்தைப் பாதுகாக்கிறது. எப்படியென்றால் இது இரத்தத்திலே எச். டி. எல். அளவைக் கூட்டுவதால் இரத்தக் குழாய்களில் அடைப்பு வராமல் பாதுகாக்கப்படுகிறது. ஆண்களுக்கு எப்போது வேண்டுமானாலும் மாரடைப்பு வரலாம். அது போலவே பெண்களுக்கும் மாதவிலக்கு நின்ற பின்னரும் 45 வயதிற்கு மேலும் எப்போது வேண்டுமானாலும் வரலாம்.

**இருதயத்தில் ஓட்டை இருப்பதை எப்படி அறிவீர்கள்?**


இருதய ஒலியின் சத்தத்தை வைத்தும் இதயக் கோளாறுகளை கவனிக்க முடியும். இதயத்தின் நான்கு அறைகளை பிரிக்கின்ற சதைச் சுவர்களில் நுண்ணிய அல்லது பெரிய துவாரம் சிலருக்கு பிறக்கும்போதே அதாவது பிறவியிலேயே ஏற்பட்டுவிடுவது உண்டு. இதயத்தில் ஓட்டை இருந்தால்தான் சத்தம் வரும் என்பதில்லை. இதய வால்புகளின் கோளாறினாலும் இதயத்தின் ஓசை மாறுபடும்.

பிறவியிலேயே இதயத்தில் அமைந்து விடுகின்ற துவாரம் மாரடைப்பின்போது வென்




ட்ரிகிளின் சதைச் சுவரில் உண்டாகும் விரிசல் காரணமாக ஏற்படும் துவாரம். நுரையீரல் தமனிக்கும், மகாதனிக்கும் இடையில் உண்டாகிவிடும் துவாரம். இவற்றினாலும் ஓட்டை விழும். ஸ்டெதஸ்கோப்மூலம் பரிசோதிக்கிறபோதும் ஈஸிஜி மூலம் கவனிக்கிற போதும் எக்கோடெஸ்ட் எடுக்கிறபோதும் ஒருவரின் இதயத்தில் ஓட்டை விழுந்திருப்பதை மிகவும் எளிதாகவே கண்டுபிடிக்க முடியும். குறிப்பாக

02



எக்கோகார்ட்டியோகிராம் ஒளிப்படத்தில் இதயத்தின் ஓட்டையை மட்டுமின்றி பெரும்பாலான இதயம் தொடர்பான சிக்கல்களை எல்லாம் கூட துல்லியமாகக் கண்டறிய முடியும்.


பெரிய துவாரமுள்ள இதய ஓட்டை உள்ளவர்களுக்கு மருத்துவர் அறுவை சிகிச்சை செய்யச் சொன்னால் உடன் செய்து கொள்வது நல்லது. இல்லையெனில் நோயாளி

இதயநோய் நிபுணர்
டாக்டர் எம்.ஜெயராஜா, MD.,DM.,
சூர்யா மருத்துவ மனை, சென்னை-93

யின் உயிருக்கு ஆபத்து நேரிடும்.

**மாரடைப்பு ஏற்பட்டவருக்கு எந்த மாதிரியான முதலுதவி செய்ய வேண்டும்?**

உடனடியாக தீவிர சிகிச்சைப் பிரிவு உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். வாகனத்தில் மருத்துவமனைக்கு வேகமாக அழைத்துச் செல்ல வேண்டும். உட்கார்ந்த நிலையிலோ சாய்ந்த நிலையிலோதான் அழைத்து வரவேண்டும். ஒரு வேளை நோயாளி வாந்தியெடுத்தால் முக்கியமாக திட உணவு மேன்மேலும் கொடுக்கக் கூடாது. (முற்றும்)





நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண் டபத்தில் நடைபெற்ற கம்பராமாயணம் பற் றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையின் பூர்த்தி விழாவன்று ஆர் மோனிய வித்துவான் கே. சத்தியனுக்கு நல்லை ஆதீன மேலாளர் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் அருகில் கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா, வயலின் வித்துவான் கே.பத்மநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் மிருதங்க வித்துவான் ரி.ராஜனுக்கு நல்லை ஆதீன முதல்வர் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# இந்தியாவும் மேற்குலக நாடுகளும் பிரிவினைவாதத்தை தூண்டுகின்றன

## அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவும் மேற்குலக நாடுகளும் நாட்டில் அரசியல் பிரிவினை வாதத்தை தூண்டுவதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனத்தில் 13 ஆம் திருத்தச் சட்ட மூலத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டுமென இந்தியாவும் மேற்குலக நாடுகளும் வலியுறுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட பிரிவினைவாதத்தை அரசியல் ரீதியாக தூண்டுவதற்கும் அரசியல் சாசனத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் முயற்சி எடுக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மஹரகம பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தென் மற்றும் மத்திய ஆசியாவிற்கான அமெரிக்கத் துணை இராஜாங்கச் செயலளர் றொபேர்ட் ஓ பிளேக்கின் விஜயம் தொடர்பிலும் கருத்து வெளியிட்டுள்ளார்.

அரசியல் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் சந்திப்புக்களை நடத்துவது வழமையானது என்ற போதிலும் பிளக் இம்முறை பல்கலைக்கழக மாணவர்களுடனும் சந்திப்பு நடத்தவுள்ளார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது ஓர் அசாதாரண நிலைமையாகவே கருதப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# முன்னாள் போராளிகள் அணி வெற்றியீட்டியுள்ளது

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு அமைச்சு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் உத்தியோகத்தர்களுடான மென் பந்து கிரிக்கெட் போட்டியொன்றில் மாத்தறைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் அணி வெற்றியீட்டியுள்ளது.

இப்போட்டி மாத்தறை சனத் ஜயசூரிய விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அமைச்சுக்களின் உத்தியோகத்தர்கள் அணிக்கு இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜயசூரிய தலைமை தாங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அமைச்சுகளின் உத்தியோகத்தர்கள் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அவ்வணி 10 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய முன்னாள் போராளிகள் அணி 7 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 64 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. (ச)




★ 1503-மைக்கல் அஞ்சலோ புகழ்பெற்ற டேவிட் என்ற சிலையை உருவாக்கும் பணிகளை ஆரம்பித்தார்.

★ 1609- ஹென்றி ஹட்சன் என்பவர் பின்னர் ஹட்சன் ஆறு எனப் பெயரிடப்பட்ட ஆற்றை அடைந்தார்.

★ 1759- கனடாவின் கியூபெக் நகருக்கருகாமையில் இடம்பெற்ற போரில் பிரித்தானியப் படைகள் பிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்தன.

★ 1788-நியூயோர்க் நகரம் ஐக்கிய அமெரிக்காவின் தற்காலிக தலைநகராக அறிவிக்கப்பட்டது.

★ 1791-பதினாறாம் லூயி மன்னன் பிரான்சின் புதிய அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டான்.

★ 1898-ஹனிபல் குட்வின் செலுலோயிட் புகைப் படச் சுருளைக் கண்டுபிடித்தார்.

★ 1914-முதலாம் உலகப் போரில் தென்னாபிரிக்கப் படையினர் ஜேர்மனியின் நபீபியா மீது தாக்குதலை ஆரம்பித்தனர்.

★ 1948-இந்தியப் படைகள் ஐதரபாத்தை இந்திய ஆளுமையின் கீழ் கொண்டு வந்தன.

★ 1949-இலங்கை, இத்தாலி, பின்லாந்து, ஐஸ்லாந்து, ஜோர்தான் ஆகிய 6 நாடுகள் ஐ.நா.வில் அங்கத்துவம் பெற சோவியத் ஒன்றியம் தடைசெய்தது.

★ 1953- நிக்கிட்டா குருஷேவ் நாட்டின் உயர் பதவியான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனார்.

★ 1989- தென்னாபிரிக்காவில் நிறவெறிக் கெதிரான மாபெரும் போராட்டம் டெஸ் மண்ட் டூட்டு தலைமையில் இடம்பெற்றது.

★ 1993-நோர்வேயில் இடம்பெற்ற இரகசியத் தொடர் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து பாலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்குமிடையே அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது.

★ 1994-யுலிசெஸ் விண்கலம் சூரியனின் தென்முனையைக் கடந்தது.

### பிறப்புக்கள்


★ 1916-ரூவால் டால், எழுத்தாளர் (இ.1990)

★ 1969-ஷேன் வோர்ன், அவுஸ்திரேலியத் துடுப்பாளர்

### இறப்புக்கள்

★ 1598-இரண்டாம் பிலிப்பு, ஸ்பானிய, போர்த்துக்கல், இலங்கை மன்னன் (பி.1526)

★ 1996-டூப்பாக் ஷகூர் , அமெரிக்க ராப் இசைக் கலைஞர் (பி.1971)



2009- தமிழறிஞரும் எழுத்தாளருமாகிய அரங்க முருகையனின் நினைவு தினம்(பி.1932)

# மூளைச் சலவை செய்யும் நோக்கில் தலைமைத்துவப் பயிற்சி

## அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

மூளை சலவை செய்யும் நோக்கில் தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படுவதாக அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் சஞ்சீவ பண்டார குற்றம் சுமத்தியுள்ளார்.

எந்தத் தரப்பினரிடமும் கருத்து கோராமல் பலவந்தமாக மாணவர்களுக்கு இவ்வாறு தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தலைமைத்துவ பயிற்சி என்ற போர்வையில் மாணவர்களுக்கு இராணுவ பயிற்சி அளிக்கப்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பயிற்சிகளில் பங்கேற்ற மாணவ, மாணவியர் உடல், உள ரீதியான பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பயிற்சியில் பங்கேற்ற மாணவர்களும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். மூன்று வாரங்களில் தலைமைத்துவத்தை கட்டியெழுப்ப முடியாது என தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பலவந்தமாக எவருக்கும் பயிற்சி அளிக்கவில்லை என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் சுனில் ஜயந்த நவரட்ண தெரிவித்துள்ளார்.

மூளைச் சலவை செய்யப்பட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச தரத்திலான மாணவர்களை உருவாக்கும் நோக்கில் இந்தப் பயிற்சி அளிக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். பல்கலைக்கழக கட்டமைப்பில் அடிப்படை ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சியின் ஒரு கட்டமாக இந்த தலைமைத்துவ பயிற்சி நடவடிக்கைகள் கருதப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


# லஷித் மாலிங்கவின் வீட்டில் கொள்ளை

காலியிலுள்ள இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னிலை வேகப்பந்து வீச்சாளர் லஷித் மாலிங்கவின் வீட்டில் கொள்ளையடிப்பதற்காக திருடர்கள் குழுவொன்று புகுந்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. எனினும் அவ் வீட்டிலிருந்து 2 ஆயிரம் ரூபாவை மாத்திரமே அவர்களால் திருட முடிந்துள்ளது.

காலி ரத்கம பிரதேசத்திலுள்ள இவ் வீடு தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. அவ்வீட்டில் குளியலறையொன்றின் யன்னலுக்கூடாக நுழைந்த திருடர்கள் பின்னர் கூரைத் தகடொன்றை அகற்றிவிட்டு அறையொன்றுக்குள் புகுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ரத்கம பொலிஸார் இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்துகின்றனர். இப்பகுதியில் விசேட பொலிஸ் குழுவொன்றும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. (ச)

# நவீன எண் சோதிடம்



## எப்போதும் நண்பர்கள் புடைசூழ வாழும் பாக்கியசாலி 44

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

### உடல் எண் 5 உயிர் எண் ௬

5,14,23 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 6 வருமேயானால் இவர்கள் புதன், சுக்கிரன் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள். இவர்கள் ஓரளவு உயரமானவர்களாகவும், கவர்ச்சியான தோற்றமுடையவர்களாகவும் காட்சியளிப்பர். இவர்களுடைய நடை, உடை பாவனைகள் மற்றவர்களை மயக்கும் அளவிற்கு இருக்கும். என்றும் தெய்வ சக்தி இவர்களை விட்டுப் பிரியாது. ஆனால் பெயர் பொருத்தமின்றி இருக்குமேயானால் இவர்களது முன்னேற்றம் தடைப்படும். அத்துடன் வெட்டிப் பேச்சும், விரயச் செலவும் செய்து கொண்டிருப்பர்.

இவர்கள் பெயர் பிறந்த தேதிக்கு பொருத்தமானதாக அமைந்துவிட்டால் தன் திறமையெல்லாம் பொருளீட்டுவதிலேயே செலவு செய்து வாழ்க்கையின் உச்ச நிலையை அடைவர். புகழும், அந்தஸ்தும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகும். ஆனால் பெயர் பொருத்தமின்றி இருக்குமேயானால், நாளுக்கு நாள் தீய வழியில் இறங்கி மனம் நொந்து வருந்துவர். அதனால் பெயரைப் பொருத்தமான நிலையில் அமைத்துக் கொள்வது அவசியம். எப்போதும் சுறுசுறுப் பாகக்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

காட்சியளிக்கும் இவர்கள் ஓய்வெடுக்க நினைத்தால் சோம்பேறி போன்று தூங்கிவிடுவர். அதே நேரத்தில் வேலையை ஆரம்பித்தால் அசுர வேகத்தில் முடித்துக் காட்டுவர்.

இவர்களுக்குப் பல்வேறு தொழில்கள் செய்கின்ற மனிதர்களது தொடர்பு இருக்கும். அத்தோடு சிறிது நேரத்தில் நன்றாக பழகிவிடுவர். எப்போதும் நண்பர்கள் புடைசூழ வாழும் பாக்கியசாலி என்றால் மிகையாகாது. பிறரைத் தன் வசமாக்கி கஷ்டப்படாமல் பொருள் சேர்த்து சுகமாக வாழ வேண்டும் என்று நினைப்பர். அன்பாகப்பழகும் இவர்கள் தனக்குப் பிடிக்காதவருக்கு கடுமையான எதிரியாக இருப்பர். இவரை வெறுப்பவன் கூட அன்பாக இருப்பது போன்று நடித்து விடுவான். இளமையிலேயே தான் எப்படி சுகமாக வாழ்வது என்று அறிந்து வைத்திருப்பதால் மற்றவர்களை அதிகாரம் செய்தும், மகிழ்வித்தும் பொருளீட்டும் வழி தெரிந்தவர்களாக இருக்கின்றனர்.

இவர்கள் மனம் அழகான பொருட்களைப் கண்டாலே நிலைத்து நின்று ரசிக்கும். இசை, நாட்டியம் போன்ற கலைகளை மெய்மறந்து இரசிப்பதால் நல்ல ரசிகன் என்றே கூற வேண்டும். இவர்களுக்கு உள்ள பலகீனம் காமம்தான். இதைப் போக்க எப்போதும் கணவன் மனைவி பிரிந்தே வாழக் கூடாது. அப்படி பிரிந்திருக்கும் சூழ்நிலை ஏற்பட்டால் தீங்கான காரியங்களில் இறங்க மனம் வழிவகுக்கும். இந்த உலகத்தில் உள்ள நல்லதையெல்லாம் நாம் அனுபவிக்கத்தான் பிறந்துள்ளோம் என எண்ணுபவர்களும் இவர்களே. சிறுவயது முதற் கொண்டே யார் எதைச் கூறினாலும் உடனே புரிந்து கொள்ளும் ஆற்றல் மிக்கவர்கள்.

சிலர் கல்வியில் தேர்ச்சி பெற்று சிறப்படைவர். பலர் தொழில் செய்து முன்னேற்றம் அடைவர். அத்தோடு இவர்களுக்குப் பல நண்பர்கள் உதவ முன்வருவதால் படைபலம் உள்ளவர்கள் போல் தைரியமாக இருப்பர். சில நேரத்தில் குழப்பங்கள் வந்தாலும் சிறிது நேரம் மனவேதனைப்பட்டு பின்தானே தெளிவான தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சந்தோஷமாக மாறிவிடுவர் கடவுள் மேல் நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பதால் பல இக்கட்டான சூழ்நிலைகளிலிருந்து தப்பித்துக் கொள்வர்.

சமயம், சட்டம், மருத்தவம் போன்றவற்றில் ஆராய்ச்சியுள்ளவர்களாக விளங்குவர். போட்டி, பந்தயங்களிலும், சூதாட்டங்களிலும் சிலர் கைதேர்ந்தவர்களாக இருப்பர். வாகனப் பிரியரான இவர்கள் தான் வைத்திருக்கும் வாகனங்களை அழகுபடுத்தி வைத்துக்கொள்வர். இவர்கள் கையில் பணம் இல்லாவிட்டாலும், தான் நினைக்கும் காரியங்களை நடத்தி முடிப்பர். இதனால் இவர்களைக் கண்டு பலர் மரியாதை கொடுப்பர். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசத் தெரியாததால் மற்றவர்கள் இவரை வெள்ளை மனம் கொண்டவர்கள் எனக் கூறுவர். இவர்கள் செய்கின்ற செயல்கள் ஒவ்வொன்றும் பிறருக்குப் பயன்படுவதாக இருப்பதோடு தானும் அதில் லாபத்தைப் பெற முயலுவர். இந்த எண்ணிக்கைகாரர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமையுமேயானால் பெரும் செல்வமும், பெரும் புகழும், பொதுமக்களின் பேராதரவும் பெற்ற மனிதனாக விளங்குவர்.

**தொழில்**

இந்த ஆதிக்கக்காரர்களுக்கு ஆடம்பரப்பொருள் சம்பந்தமான அனைத்துத் தொழில்களும் சிறந்தவையே. கமிஷன், கான்ட்ராக்ட், ஏஜென்சீஸ், போன்ற தொழிலும், இரும்பு சம்பந்தமான, வாகனம் சம்பந்தமான தொழில்கள் அனைத்தும் இவர்களுக்கு வெற்றி அளிக்கும்.

**நோய்**

இந்த எண்ணிக்கைகாரர்களுக்கு உடல் உறவு சம்பந்தமான நோய்களும் நீர் சம்பந்தமான நோய்களும் வர வாய்ப்பிருப்பதால் முன்கூட்டியே கவனித்துக் கொள்வது நலம். சக்கரை, உப்பு, போன்றவற்றைக் குறைத்துக் கொள்வது நலம்.

**பெயர் அமைக்கும் முறை**

புதன், சுக்கிரன் ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு மேற்குறிப்பிட்ட ஆதிக்கமான 14, 23, 32,41,50,59,77,15,24,33,42, 51,60,69 போன்ற எண்களில் பெயரை அமைத்தக் கொள்வது சிறப்பாகும்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்- 5,6

யோகமான தேதிகள்- 5,14, 23,6,15,24,1,10,19,28

யோகமான மோதிரக்கல்- வைரம், ஜிர்கான், மரகதம்

யோகமான நிறம்- சாம்பல் நிறம், வெளிர் ப்ச்சை, வெளிர் நீலம்

ஆகாத நிறம்- ரோஸ், ஆரஞ்சு, கத்தரிபூ நிறம்

ஆகாத தேதிகள்- 3,12,21,30

* * *


## பெயர் எண்களின் பலன்!

**26 எண் பலன்**

இந்த எண்களில் சந்திரனும், சுக்கிரனும் ஒன்று சேர்ந்து சனியாகிய 8 வருவதால் இவர்களது வாழ்க்கை ஆடம்பரமும், ஆர்ப்பாட்டமும் கொண்டதாகிவிடும். இந்த எண்ணிக்கையில் பெயர் கொண்டவர்கள் தனது பின் வாழ்க்கையில் வருந்துவர். முன் வாழ்க்கையில் கிடைத்த நல்ல வாய்ப்புகளை பயன்படுத்தாது பின்னால் வருத்தப்படுவதால் இந்த எண் சிறந்ததாக இல்லை.

**27 எண் பலன்**

இந்த எண்களில் சந்திரன் என்ற 2ம் கேது என்ற 7ம் சேர்ந்திருப்



பதால் மிகச்சிறந்த பலனை அளிக்கும் என்பது உறுதி. இவர்களது விடா முயற்சியாலும், பெரும் உழைப்பாலும் புகழ், அந்தஸ்து, செல்வம் ஆகியவை உயர்வோடு அதிகாரமான பதவியை அடைவர். தன் நாட்டிற்காகவும், தன்னைச் சார்ந்தவர்களுக்காகவும் ஓடோடி உழைப்பர். தீய செயலில் இறங்குவதற்கு இவர்கள் மனம் இடந்தராது. நாம் செய்கின்ற செயலில் பலன் அடைகின்றோமா? நம்மைச் சார்ந்தவர்கள் பலன் அடைகின்றனரா? என்று கணக்கிட்டுத்தான் செயற்படுவர். இவர்களுக்கு ஆண்டவனுடைய அருள் உண்டு. ஆனால் 2,11, 20,29,7,16,25 போன்ற தேதியில் பிறந்தவர்கள் கண்டிப்பாக இந்த எண்ணில் பெயரை அமைத்துக் கொள்ளகூடாது. அவ்வாறு அமைத்துக் கொண்டால் வீண் சிக்கலும், தேவை இல்லாத காரியங்களிலும் இறங்கி தொல்லையுறுவர்.

**28 எண் பலன்**

இந்த எண் பெயராகவோ, அல்லது வியாபார விலாசமாகவோ வருமேயானால், சோகமே காட்சியாகத் தெரியும். எங்கு சென்றாலும் கஷ்டங்களையும் போட்டிகளையும் சந்திக்க நேரும். சிறிது முன்னேற்றம் அடைந்தால் அடுத்து இழக்க நேரும். இளமையில் சுகமாக இருந்த இவர்கள் வயது ஏற ஏற பேரிழப்பையும், குழப்பத்தையும் சந்திக்க நேரும். எங்கு சென்றாலும் பொல்லாப்பும், கெட்ட பெயரும் ஏற்ப்படும். தன்னுடைய முயற்சிகள் தோல்வியாக முடிவதால் வாழ்க்கையை வெறுக்க நேரிடும். இவர்களுடைய சொத்துக்கள் திடீரென்று பறிமுதலாகும். இதனால் 1எண்களில் 28 எண் மிகவும் மோசமானதாக இருப்பதால் உங்களது பெயரை வேறு ஒன்று எண்களில் மாற்றிக் கொள்ளவும்.

(தொடரும்)

# அரசியலிலும் சர்வதேச சட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும்

## கரு ஜயசூரிய எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச ஜனநாயக நாடுகள் தேர்தலை நடத்தும் முறையும் நம் நாட்டில் தேர்தல் நடைபெறும் முறையும் நேர் மாறாக உள்ளது. கிரிக்கெட் விளையாட்டைப் போன்று சர்வதேச சட்டங்கள் அரசியலுக்கும் தேவை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற கூட்டமொன்றிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

உலகத்திலுள்ள ஜனநாயக நாடுகள் தேர்தலை நடத்தும் போது மேற்கொள்கின்ற நடவடிக்கைகளும் எமது நாட்டில் தேர்தல் நடைபெறும் போது பின்பற்றப்படும் முறையும் எதிர் மாறாக உள்ளது.

உலகில் மற்றைய நாடுகளில் தேர்தல்கள் ஒரேமுறையில் இடம்பெற்றாலும் எமது நாட்டில் பகுதி பகுதியாகவே பிரித்துப் பிரித்து துண்டாடி அடாவடித்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பிட்ட சிலர் தமது பலத்தை முழுமையாகக் குவியச் செய்து அரசியல் செய்கின்றனர். அதன் அடிப்படையில் மக்களை திசை திருப்பி தேர்தல்களை நடத்துகின்றனர். நாங்கள் கிரிக்கெட்டை ஒரு தலை சிறந்த கனவான் விளையாட்டாக மதிக்கின்றோம். அதற்குக் காரணம்,

கிரிக்கெட்டிலுள்ள சர்வதேச சட்ட திட்டங்களாகும். அதே போன்று அரசியலுக்கும் சர்வதேச சட்டதிட்டங்கள் அவசியம்.

ஆனால் அரச கட்சியும், எதிர்க்கட்சியும் சமமாக நின்று தேர்தலில் போட்டியிட வேண்டும். மாறாக ஆளும் கட்சி அரச வளங்களையும் வாகனங்களையும் ஊடகங்களையும் அடாவடித்தனங்களையும் ஆட்சிப்பலத்தையும் பாவித்து சட்ட விரோதமான முறையில் வாக்குகளை பெறுமானால் அங்கு ஜனநாயகத்தை எதிர்பார்க்க முடியாது.

(ஸ்ரீ-2)

# குறுக்குவழியை பின்பற்றினால் அரசியலில் ஜெயிக்க முடியாது

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியலில் குறுக்கு வழி என்று ஒன்று கிடையாது. குறுக்கு வழியைப் பின்பற்றினால், குறுகிய காலத்தில் அந்த அரசியல் அவர்களைக் கைவிட்டு விடும். இன்று சிலர் அரசியலில் குறுக்கு வழிகளைக் கையாள்வதாக ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற திஸ்ஸ அத்தநாயக்கவின் வாழ்க்கைச் சரித நூல் வெளியீட்டு விழாவில் அவர் வரவேற்புரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தான் 30 வருட காலங்களாக அரசியலில் ஈடுபட்டுள்ளதாகவும் 1989 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பாராளுமன்ற அங்கத்தவராக செயற்பட்டு வருவதாகவும் தனது இப்பயணம் நீண்ட வரலாறு கொண்டதென்றும் கூறினார்.

எனவே, நீண்ட நாட்களான அப்பயணம் பற்றிய அனுபவங்களைத் தொகுத்து மற்றவர் அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வ தற்காக இந்நூலை வெளியிட்டதாகக் கூறினார்.

எனவே, அரசியலில் அடி எடுத்துவைப்போர் குறுக்கு வழிகளைக் கையாளாது நேர்மையாகவும் தியாகத்துடனும் பொறுமையுடனும் 20 அல்லது 30 வருட அனுபவத்தைப் பெற்றால் மட்டுமே அதில் பிரகாசிக்க முடியும் என்றார்.

நூல் வெளியீட்டு விழாவில் ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கருஜயசூரிய பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். (ஸ்ரீ-2)

# இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதியில்லை

## கடற்படை அறிவிப்பு

இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு எவருக்கும் அனுமதியில்லை என கடற்படை அறிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து சட்டவிரோதமான முறையில் வேறு நாடுகளுக்கு செல்வதற்கோ அல்லது உட்பிரவேசிப்பதற்கோ அனுமதி கிடையாது என கடற்படைத் தளபதி டி.டபிள்யூ.எஸ். திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளரின் ஆலோசனைக்கு அமைய நாட்டின் ஒட்டுமொத்த கரையோரப் பிரதேசத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு இலங்கையின் கல்முனை கடற்பரப்பில் வைத்து அவுஸ்திரேலியா புறப்பட்ட படகுப் பயணிகளை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

44 பேரைக் கொண்ட குழுவினரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 41 ஆண்களும் ஒரு பெண்ணும் இரண்டு குழந்தைகளும் பயணம் செய்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

நீர்கொழும்பு பிரதேசத்திலிருந்து புறப் பட்டு சென்றவர்கள் கல்முனைக் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த படகு திருகோணமலை துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரைவில் நியூயோர்க் விஜயம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் 66ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியூயோக்கிற்கான விஜய்ம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அட்டவணைக்கு அமைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 23 ஆம் திகதி ஐ.நா.சபையில் உரையாற்றவுள்ளார்.

பாலஸ்தீனிய பிரச்சினை தொடர்பாக இலங்கை ஆதரவு வழங்கிய அதேவேளை, அதற்கான முக்கியத்துவத்தை கொடுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த கூட்டத் தொடரில் உரையாற்றுவது விசேட அம்சமென ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் எதிர்வரும் வாரத்தில் நியூயோர்க்கிற்கு விஜயம் செய்யவுள்ளதாக ஏசியன் ரிபியூன் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் கலந்து கொள்ளவுள்ள ஜனாதிபதி, பன்னாட்டு இராஜதந்திரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அந்த இணையத்தளம்செய்திவெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இந்தியாவுக்கு யாத்திரை செல்லும் இலங்கை யாத்திரிகர்களுக்கு விசேட புகையிரத சேவை

இந்தியாவுக்கு யாத்திரை மேற்கொள்ளும் இலங்கை யாத்திரிகர்களுக்கான விசேட புகையிரதச் சேவையொன்றை எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் நடத்த இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சென்னையிலிருந்து புத்தகாயா, சாதாணாத், கபிலவஸ்து, சாஞ்சி மற்றும் குஷிநகர் ஆகிய பௌத்த மத வழிபாட்டுத்தலங்களை நோக்கி இந்தப் புகையிரதச் சேவை நடத்தப்படவுள்ளது.

இதன்போது, இலங்கையின் உணவு வகைகளை யாத்திரிகர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# வெளிநாடுகளில் கல்வியைத் தொடர வருடாந்தம் 110 பில்லியன் செலவிடும் இலங்கை மாணவர்கள்

இலங்கை மாணவர்கள் வெளிநாடுகளில் கல்வியைத் தொடர்வதற்காக வருடாந்தம் 110 பில்லியன் ரூபா செலவிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கல்விச் செலவுகளுக்காகவும் மாணவர்களின் பராமரிப்புச் செலவிற்காகவும் இந்தப் பணம் செலவிடப்படுவதாக இலங்கை மத்திய வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது வெளிநாடுகளில் சுமார் ஒரு இலட்சம் மாணவ, மாணவியர் உயர்கல்வியைத் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. மாணவர் ஒருவருக்காக பெற்றோர் சராசரியாக வருடாந்தம் தலா 10 ஆயிரம் அமெரிக்க டொலர்களை செலவிட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையில் தரமான உயர்கல்வி நிறுவனங்களை அமைப்பதன்மூலம் பாரியளவிலான நிதியை சேமிக்க முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களை அமைப்பதன்மூலம் அந்நிய செலாவணியை நாட்டுக்கு ஈட்டிக்கொடுக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)


◆ A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!
◆ வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
◆ உள்ளூரில் சுயமாகத் தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
◆ இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!

எமது 26 வருடகால சேவையில் எம்மிடம் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றனர். நீங்களும் அவ்வாறே ஆகவேண்டுமா?

உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன

சனி ஞாயிறு பிரிவு ஆரம்பம் : 18-09-2011 காலை 09.00 மணி
கிழமைநாள் பிரிவு ஆரம்பம் : 19-09-2011 காலை 09.00 மணி

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்
- கைவேலை
- Saree Work
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் (Hair Dressing & Styling)
- பூவேலை
- ப்ஃறிக் வர்ணம் தீட்டுதல்
- தையல் அறிவு அற்றவர்களுக்கான தையல் (உடை தயாரித்தல்) பயிற்சிகள்.
- மேற்குறித்த பயிற்சிகளின் நடுப்பகுதியில் Facials, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure பயிற்சிகளும் நடைபெறும்.

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

தையல் தெரிந்தவர்களுக்கான 10 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

மேலும் விபரங்களை தினமும் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.



கலாலயா
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

# இந்தியக்குழுவினரின் இலங்கை விஜயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்

## அமைச்சர் டளஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

இந்திய எதிர்க்கட்சி தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்றமையானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

இதன்மூலம்நாட்டின்நிலையமையை இந்திய எதிர்க்கட்சி தலைவிக்கு நேரில் பார்த்து புரிந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இந்திய எதிர்க்கட்சி தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழுவினர் இம்மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளமை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விபரிக்கையிலேயே அமைச்சர் டளஸ் அழகப்பெரும மேற்கொண்டவாறு கூறினார்.

அமைச்சர் இவ்விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்;

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் எப்போதும் இல்லாதவாறான நெருங்கிய உறவு தற்போது இருந்து வருகின்றது. கடந்த 1988 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டுவரை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு கைவிடுதல் என்ற நிலையிலேயே காணப்பட்டது.

ஆனால், 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு நெருக்கமான போக்கை கொண்டுள்ளது. முன்னர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சியில் இருக்கும்போது காங்கிரஸ் கட்சியுடன் உறவைக் கொண்டிருந்தார். ஜே.ஆர். ஜயவர்த்தன ஆட்சியில் இருக்கும் போது பி.ஜே.பி. கட்சியுடன் உறவைக் கொண்டிருந்தார்.

ஆனால், கடந்த 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எமது அரசாங்கமோ இந்திய ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி என முழு இந்தியாவுடனேயே உறவைக் கொண்டுள்ளது.

அந்த வகையில் இந்திய எதிர்க்கட்சி தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழுவினரின் விஜயமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருதரப்பு உறவின் ஆழத்தை வெளிக்காட்டுவதாகவும் அமையும் என கருதுகின்றோம்.

இந்திய எதிர்க்கட்சி தலைவரின் விஜயமானது சிறந்த ஆரோக்கியமான நிலையை உருவாக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அத்துடன் இலங்கையின் உண்மை நிலையை அவர்கள் புரிந்துகொள்வதற்கு சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என்று நம்புகின்றோம்.

(ஸ்ரீ-2)

# பூரான் கடிக்கு உரிய சிகிச்சை அவசியம்

பூரான் கடிக்கு இலக்கானவர்கள் உரிய சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளத் தவறினால் பிற்காலத்தில் கண்பார்வை குறைதல்,பற் சிதைவு, முடி உதிர்தல் போன்ற நோய்களால் பீடிக்கப் படலாம் என களனி விஷ சிகிச்சை மருத்துவ நிலையத்தின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் வனித்தா கல்யாணி பத்திராஜ் தெரிவித்துள்ளார்.

உறங்கிக் கொண்டிருக்கையில் பூரான் தீண்டினால் உணர்வதில்லை எனவும் இதனால் உரிய சிகிச்சை பெற்றுக்கொள்ள அவர்கள் தவறிவிடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும் பூரான்கடிக்கு இலக்கான இடத்தில் அவ்வப்போது வலி கூடிக் குறைவதை உணர முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# வாகன இலக்கத்தகடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துக் கிளையில் விண்ணப்பித்தவர்களுக்கான வாகன இலக்கத் தகடுகள் (வடமாகாணம்) ஒரு தொகுதி கிடைக்கப் பெற்றுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

எனவே, வாகன உரிமையாளர்கள் அலுவலக நேரத்தில் தமது வாகனப் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி, அதன் புகைப்படப்பிரதி, தேசிய அடையாள அட்டை, பழைய இலக்கத் தகடுகள் (பழைய பதிவேடுகளுக்கு மாத்திரம்) ஆகிய ஆவணங்களுடன் நேரில் சமூகமளித்து இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

வாகன இலக்கத்தகடுகளின் விபரம் வருமாறு;

OH-1326, LE-0502, QL-6545, QE-5108, GW-0446, YE-1667, HW-7286, RV-7910, QJ-0671, LC-2869, QD-7913,QE-9547,GJ-5321, YE-3629,GB-4093,GJ-5677,JA-1818, LF-1940,JN-5038,QI-9416,YE-3449,YE-0710,JN-1987, RB-4780, QH-5802, JG-2626,JR-3390,QA-9122,YE-0709,YE-8226,JW-5667, RV-6091,RV-0190,LD-2060,HE-8153,GJ-6653,YE-6826, YD-6478, MH-6345, HY-7700, QZ-6672, HT-4204, QH-4909, QY-2610, YE-4412, YI-9821, RB-5039, GA-8061, JZ-1082, HV-6055, HT-9968, YD-2933, YE-5188, YH-7009, JX-0622, RV-5897, GS-9907, JU-6641, JQ-1900, YD-4128, YE-1704, YG-8442, JW-8452, HJ-5368, VT-7365, QA-8508, QI-0697, YD-5011, YE-2439, PA-4357, HI-4970, GJ-9678, LF-2212, JO-2657, HR-7554, HA-6101, YE-2427, HA-2544, RB-3412, HG-2413

(ஸ்ரீ-2)

# இரணைமடு குடிநீர்த்திட்டத்திற்கு 21 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான இரணைமடுக்குளக் குடிநீர்த் திட்டமானது கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாக வெள்ளிக்கிழமை சபையில் அறிவித்த நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை இதற்கென 21 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்படவிருப்பதாகவும் தெரிவித்தது.

பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அமர்வின்போது ஆளும்கட்சி எம்.பி. ஏ.எச்.எம்.அஸ்வரினால் எழுப்பப்பட்டிருந்த கேள்விக்கு நீர்வழங்கல் வடிகால் அமைச்சின் சார்பில் பதிலளிக்கையிலே ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்;

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுகளுக்கு அமைவாக 90 மில்லியன் டொலர் கடனுக்காக ஒப்பந்தம் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

மேற்படி குடிநீர்த் திட்டத்தின் மொத்த செலவு 164.04 மில்லியன் டொலர்களாகும். மேலதிக தொகையை அரசாங்கத்திடமிருந்தும் பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிலையத்திடமிருந்தும் முறையே 26.04, 48.00 மில்லியன் டொலர்களைப் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இத்திட்டத்தினூடாக மூன்று இலட்சம் பேருக்கு குடிநீர் வசதியும் 80 பேருக்கு துப்புரவேற்பாட்டு வசதிகளும் பெற்றுக்கொடுக்கப்படவிருக்கின்றன.

இதன்பிரகாரம் பலாலி, பூநகரி, யாழ்ப்பாணம், கொடிகாமம், கரவெட்டி, சாவகச்சேரி, நாவற்குழி, கோப்பாய், அச்சுவேலி, சண்டிலிப்பாய், கட்டுடை, நவாலி, சங்கானை, நல்லூர், மூளாய், அராலி, வட்டுக்கோட்டை, காரைநகர், ஊர்காவற்றுறை, அனலைதீவு, எழுவைதீவு, புங்குடுதீவு, வேலணை மற்றும் மண்டைதீவு உள்ளிட்ட பிரதேசங்களை சேர்ந்த மக்கள் பயனடையவுள்ளனர்.

நான்கு வருடங்களைக் கொண்ட இத்திட்டத்தின் பணிகளை விரைவாக நிறைவு செய்வதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகின்றது.

(ஸ்ரீ-2)

# அமெரிக்கத்தூதுவர் பற்றீசியா மட்டக்களப்புக்கு விஜயம்

(கொழும்பு)


இலங்கைக்கான அமெரிக்க நாட்டுத் தூதுவர் பற்றீசியா புட்டினிஸ் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்து பல்வேறு பிரமுகர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்தார்.

கல்முனை மாநகரசபைத் தேர்தலில் தலைமை வேட்பாளராக போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதி செயலாளர் நாயகம் நிசாம் காரியப்பர், காத்தான்குடி நகரசபை உறுப்பினரும் பெண்களுக்கான விழிவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் பணிப்பாளருமான சல்மா அமீர் ஹம்சா ஆகியோரை மட்டக்களப்பு சிங்பிஸ் விடுதியில் வைத்து சந்தித்து கலந்துரையாடினார்.

முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அண்மைக்காலத்தில் நடைபெற்ற கிறிஸ் மனிதன் பற்றிய விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டன.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடமைப்பு வசதிகள், பெண்களின் சமூக பொருளாதார அரசியல் நிலைப்பாடுகள், பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், அவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகள் போன்ற விடயங்களும் ஆராயப்பட்டதாக காத்தான்குடி நகரசபை உறுப்பினர் சல்மா அமீர் ஹம்சா தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு UMCOR நிறுவனத்தால் சொகுசு பஸ் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இதற்கான ஆவணங்களை பீடாதிபதி எஸ்.கே. யோக நாதனிடம் UMCOR நிறுவன தலைவர் கையளிப்பதையும் அருகில் லிவர்பூல் நவிகேசன் நிறுவன இயக்குநர் எஸ்.வின்சன்றாராஜன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# சுதந்திரக்கட்சி மேலும் வலுப்படுத்தப்படவுள்ளது

(கொழும்பு)

எதிர்க்கட்சி வலுவிழந்து காணப்பட்டாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை தொடர்ந்து வலுப்படுத்த வேண்டியது அவசியம் என கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பியகம தொகுதியில் உள்ள கட்சியின் ஆதரவாளர்களுக்கு பாராட்டு தெரிவிப்பதற்காக மாகெல பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபமொன்றின் போது அவர் மேற்காண்டவாறு தெரிவித்துள்ளார்.

60 வருடங்களை பூர்த்தி செய்துள்ள கட்சியை எதிர்வரும் 60 வருடங்களுக்கு எவ்வாறு முன்னோக்கி கொண்டு செல்வது என்பதனை கருத்திற்கொண்டே கட்சியின் முக்கியஸ்தர்கள் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு செயற்படாமல் எதிர்கால சந்ததியினருக்கு அரசியல் செயற்பாட்டின் அடிப்படை விடயங்கள், கொள்கைகள் மற்றும் நோக்கங்களை தெளிவுபடுத்த வேண்டியது அவசியம் எனவும் சுட்டிக் காட்டினார்.

(ஸ்ரீ-2)

# கடாபி ஆதரவாளர்களுடனான பேச்சுவார்த்தை தோல்வி

## இடைக்கால அரசின் தலைவர் டிரிபோலி வந்தார்

(டிரிபோலி)

லிபியா முழுவதும் எதிர்ப்பாளர்கள் வசம் வந்து விட்ட நிலையில், டிரிபோலியின் தெற்கில் உள்ள பானி வாலித், சபா, ஜுப்ரா நகரங்களும், கிழக்கில் உள்ள சிர்ட் நகரமும் கடாபி ஆதரவாளர்கள் வசம் உள்ளன. எவ்வித உயிரிழப்புமின்றி அந்நகரங்களைக் கைப்பற்றுவதற்காக, எதிர்ப்பாளர்கள், கடாபி ஆதரவு பழங்குடியினருடன் பேச்சு நடத்தினர். கடாபி ஆதரவாளர்கள் சரணடைவதற்கு கடந்த 10 ஆம் திகதி வரை கெடு விதிக்கப்பட்டது. எனினும் பேச்சு தோல்வியில் முடிந்தது.

இதையடுத்து நேற்று முன்தினம் பானி வாலித், சபா மற்றும் சிர்ட் நகரங்களில் உள்ள கடாபி ஆதரவாளர்களுக்கும் அந்நகரங்களை முற்றுகையிட்டுள்ள எதிர்ப்பாளர்களுக்கும் இடையில், சண்டை மூண்டது. பானி வாலித் நகர் மீது நேற்று முன்தினம் நேட்டோ படை ஐந்து முறை குண்டு வீசித் தாக்குதல் நடத்தியது.

இதற்கிடையில் லிபியா இடைக்கால கவுன்சில் தலைவர் முஸ்தபா அப்துல் ஜலீல் நேற்று முன்தினம் முதன்முறையாக டிரிபோலி வந்தார்.

இது பழிவாங்கல் சட்டத்தை நாமே கையில் எடுத்தல் போன்ற காரியங்களுக்கான நேரமல்ல. இது ஒற்றுமையையும் ஒழுங்கையும் பேண வேண்டிய நேரம் என்றார். பாதுகாப்பு கருதித் தான் இதுவரை டிரிபோலிக்கு ஜலீல் வரவில்லை எனத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடைக்கால அரசின் செய்தித் தொடர்பாளர் ஜலால் அல் கலால் ஜலீலின் வருகை வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த நிகழ்வு என்று கூறியுள்ளார். பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகள் லிபியா இடைக்கால அரசை அங்கீகரித்துள்ள நிலையில், நேற்று முன்தினம் சர்வதேச நிதியமைப்பும் இடைக்கால அரசை லிபியாவின் புதிய அரசாக ஏற்றுக் கொண்டுள்ளது. (ஸ்ரீ-2)




அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இரட்டை கோபுரம் தகர்க்கப்பட்டதன் 10 ஆண்டுகள் நினைவு தினத்தை முன்னிட்டு, ஜனாதிபதி ஒபாமா, அவரது மனைவி மிச்சேல், முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், அவரது மனைவி லாரா புஷ் ஆகியோர் மௌன அஞ்சலி செலுத்துவதை படத்தில் காணலாம்.

# பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழிக்க அமெரிக்கா உறுதி பூண்டுள்ளது

## ஒபாமா தெரிவிப்பு

எதிர்வரும் தலைமுறையினருக்கும் பயங்கரவாதம் இல்லாத அமைதியான சமுதாயத்தை அளிக்க வேண்டும். இதற்காக பயங்கரவாதத்தை பூண்டோடு அழிக்க அமெரிக்க அரசு உறுதி பூண்டுள்ளது என்று அந்நாட்டுஜனாதிபதி ஒபாமாதெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் உலக வர்த்தக மைய இரட்டை கோபுரங்கள் பயங்கரவாதிகளால் விமானம்மூலம் தாக்கப்பட்டதன் நினைவு தினம் நேற்று முன்தினம் அனுசரிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு வானொலிமூலம் ஒபாமா நாட்டுமக்களுக்கு உரையாற்றினார். அதில் அவர் கூறியது, சரியாப 10 ஆண்டுகளுக்கு முன்னாள் இதேநாளில் நாம் மிகப் பெரிய சோதனையைச் சந்தித்தோம். அனைவரது மனதிலும் நீங்காத சோகத்தை ஏற்படுத்தியிருந்தபோதிலும், அமெரிக்கர்களின் மனதைரியமும், துணிவும் அன்றுதான் வெளிப்பட்டது.

பயங்கரவாதிகளுக்கு எதிராக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் இன்று நமது நாடு சகலவிதத்திலும் பாதுகாப்பானதாக உள்ளது. அமெரிக்கா பலமாக உள்ளது. பயங்கரவாத இயக்கமான அல்கொய்தா அழிவை நோக்கிச் சென்றுவிட்டது. நாம் நேசிக்கும் நாட்டை உயிரைக்கொடுத்தும் பாதுகாக்கத் தயாராக இருக்கிறோம்.

அடுத்த தலைமுறையினருக்கு பலமான, வளமான, பாதுகாப்பான நாட்டை நாம் அளிப்போம். பயங்கரவாதத்துக்கு எதிராக போரில் ஒருபோதும் பின்வாங்கமாட்டோம் என்றார் ஒபாமா. (ஸ்ரீ-2)

# பாகிஸ்தான் திரும்ப முஷாரப் விருப்பம்

நாடு திரும்ப உத்தேசித்துள்ளதாக பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் தாம் பாகிஸ்தான் திரும்ப உத்தேசித்துள்ளதாக முஷாரப் சர்வதேச ஊடகமொன்றுக்கு தகவல் வெளியிட்டுள்ளார்.

கைது செய்யப்படக்கூடிய சாத்தியம் காணப்படுகின்ற போதிலும் தாம் நாடு திரும்ப தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவின் உயிரைப் பாதுகாக்கத் தவறியதாக முஷாரப் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றினால் முஷாரப்பிற்கு எதிராக பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை எனவும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக ஜோடிக்கப்பட்டவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பூட்டோவின் படுகொலைச் சம்பவத்திற்கும் தமக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பாகிஸ்தானில் வெள்ளம் 141 பேர் உயிரிழப்பு



தெற்கு பாகிஸ்தானில் பெய்த கன மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 141 பேர் பலியாகியுள்ளனர்.

40 இலட்சம் மக்கள் வீடுகளை இழந்துள்ளதாக அந்நாட்டுப் பிரதமர் யூசுப் ரசா கிலானி தெரிவித்துள்ளார்.

சிந்து மாகாணத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்தது. இது வழக்கத்தைவிட 142 வீதம் அதிகம். வெள்ளப்பெருக்கு காரணமாக 21 மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. 17 இலட்சம் ஏக்கர் விவசாய நிலம் உட்பட மொத்தம் 41இலட்சம் ஏக்கர் நிலங்களில் வெள்ளநீர் தேங்கியுள்ளது. வெள்ளப்பெருக்கில் சிக்கி இதுவரை 141பேர் பலியாகியுள்ளதாக பிரதமர் யூசுப் ரசா கிலானி தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பகுதியில் தற்போது 4 ஆயிரம் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெள்ளத்தால் வீடுகளை இழந்துள்ள 40 இலட்சம் பேரில், 1.5இலட்சம் பேர் அதில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அதைத் தொடர்ந்து ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட கூடாரங்கள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் அவர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. வெள்ளத்தால் கடுமையாக பாதித்துள்ள தங்கள் நாட்டு மக்களுக்கு உலகநாடுகள் மற்றும் தன்னார்வ அமைப்புகள் உதவ முன்வரவேண்டும் என்று கிலானி வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)




# பின்லேடனின் மனைவியரை விடுவிக்க தலிபான் தீவிரவாதிகள் சதித்திட்டம்

(கராச்சி)

அல்கொய்தா தீவிரவாதிகளின் தலைவர் பின்லேடன் பாகிஸ்தானில் உள்ள அபோதாபத்தில் வைத்து அமெரிக்காவின் நேவிசீல் சிறப்பு இராணுவப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பின்னர் அவரது உடலை அமெரிக்க இராணுவ வீரர்கள் தூக்கி சென்றனர். பின்லேடன் கொல்லப்பட்ட அந்த வீட்டில் அவரது 2 மனைவிகள் மற்றும் ஏராளமான குழந்தைகள் இருந்தனர். அவர்களை பாகிஸ்தான் அரசு கைது செய்தது. தற்போது அவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் பின்லேடனின் மனைவி மற்றும் அவரது குழந்தைகளை விடுவிக்க தலிபான் தீவிரவாதிகள் சதி திட்டம் தீட்டி இருப்பதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதற்காக அரசு உயர் அதிகாரிகளை கடத்தி சென்று பிணைக்கைதிகளாக வைத்து மிரட்டி அவர்களை விடுதலை செய்ய நிர்ப்பந்தம் செய்ய திட்டமிட்டிருப்பதாகவும் அறிவித்துள்ளனர்.

ஆனால், இதை உள்துறை மந்திரி ரஹ்மான் மாலிக் மறுத்துள்ளார். அதற்கான ஆதாரம் எதுவும் இல்லை என கூறியுள்ளார்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட ஆளுநரின் மகன் ஷாபாஷ் தஷீர் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார். அதற்கு 3 நாட்களுக்கு முன்புதான் இது குறித்து உயர் அதிகாரிகளுக்கு உள்துறை மந்திரி ரஹ்மான் மாலிக் எச்சரிக்கை கடிதம் அனுப்பி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



அமெரிக்காவின் இரட்டைக்கோபுரத் தகர்ப்பின் 10ஆவது ஆ[illegible] நினைவு தினத்தை முன்னிட்டு நியூயோர்க்கில் அக்கட்டடங்கள் இ[illegible] இடத்தில் அஞ்சலி செலுத்த குவிந்த மக்கள்.

# பயங்கரவாத தடைச் சட்டத்தினை நீக்காது நாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்த முடியாது

## மலையக மக்கள் முன்னணி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை நீக்காது நாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்த முடியாது என மலையக மக்கள் முன்னணி கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

மூன்று தசாப்தகாலமாக நீடித்து வந்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட போதிலும் அதற்கு நிகரான பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் இருப்பதாகவும் மலையக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் ஏ.லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

போர் நிறைவடைந்து இரண்டாண்டுகள் கடந்துள்ள நிலையில், அனைவரினதும் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யும் வகையில், அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது.

முகாம்களிலும், சிறைகளிலும் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 800 இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை விடு தலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 700 இற்கும் மேற்பட்டவர்கள் மலையக பெருந்தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# கொழும்பிலுள்ள காணிகள் விற்கப்படமாட்டாது

## ஜனாதிபதியின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு காணிகளை அரசாங்கம் விற்பனை செய்யாது என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் குற்றம் சுமத்துவதனைப் போன்று கொழும்பு காணிகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யும் அவசியம் அரசாங்கத்திற்கு கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க வானொலிச் சேவை ஒன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். கொழும்பின் அபிவிருத்திப் பணிகள் ஆசிய பிராந்திய வலய நாடுகளில் முதனிலை வகிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கொழும்பு நகரை எழில்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஒரு பின்னணியில் கொழும்பு காணிகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய வேண்டிய அவசியம் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையின் முதலாவது பெண் சட்டமா அதிபர் பதவியேற்பு



(கொழும்பு)

சொலிசிற்றர் ஜெனரல் ஈவா வனசுந்தர புதிய சட்டமா அதிபராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று பதவிப் பிரமாணம் செய்துள்ளார். இலங்கையின் முதலாவது பெண் சட்டமா அதிபர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை சட்டமா அதிபராக பதவி வகித்த மொஹறன் பீரிஸ் கடந்த ஓகஸ்ட் 31 ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றதையடுத்து ஈவா வனசுந்தர செப்டெம்பர் முதலாம் திகதியிலிருந்து பதில் சட்டமா அதிபராக கடமையாற்றினார். நேற்று அவர் புதிய சட்டமா அதிபராக பதவியேற்றுள்ளார்.

1979 ஆம் ஆண்டு அரச சட்டத்தரணியாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்த ஈவா வனசுந்தர, சிரேஷ்ட வழக்குரைஞர், பிரதி சொலிசிற்றர் ஜெனரல், மேலதிக சொலிசிற்றர் ஜெனரல், சொலிசிற்றர் ஜெனரல் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார். (ஸ்ரீ-4)

# ஜெனீவா சென்றுள்ள இலங்கை தூதுக்குழு நவநீதம்பிள்ளையை சந்தித்து பேச்சுவார்த்தை

(கொழும்பு)

ஜெனீவா மனித உரிமை கூட்டத்தொடரின் போது மனித உரிமை பேரவையின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையை சந்தித்து பேச்சு நடத்தவுள்ள அரசாங்க தூதுக்குழு மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்கான தேசிய செயற்பாட்டு வேலைத் திட்டம் தொடர்பில் கலந்துரையாடுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்கும் பாதுகாப்பதற்குமான தேசிய செயற்பாட்டு வேலைத்திட்டத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ள நிலையில் அது தொடர்பிபில் நவநீதம்பிள்ளையுடன் விரிவான பேச்சுக்களை நடத்த அமைச்சர் மஹிந்த சமரசிங்க தயாராகி வருவதாக தெரியவருகின்றது.

ஜெனீவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடரில் கலந்து கொள்ளவுள்ள அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான குழுவினர் அங்கு பல முக்கியஸ்தர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

அதில் முக்கியமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை மற்றும் பேரவையின் தலைவர் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் பேரவையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

மனித உரிமை பேரவையின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடனான சந்திப்பின்போது இலங்கையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளமை முன்னாள் போராளிகள் சமுகமயப்படுத்தப்பட்டு வருகின்றமை, இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கான வசதிகள், தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பாராளுமன்ற தெரிவுக்குழு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்படும் என்று அமைச்சுத் தகவல்கள் குறிப்பிட்டன.

இதேவேளை அண்மையில் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுள்ள மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்கான தேசிய செயற்பாட்டு வேலைத்திட்டம் தொடர்பில் நவநீதம்பிள்ளை உள்ளிட்ட முக்கியஸ்தர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.

இவ் ஆண்டிலிருந்து ஐந்து வருடங்களுக்கு மனித உரிமை தொடர்பான தேசிய செயற்பாட்டு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும். மேலும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய செயற்பாட்டு வேலைத்திட்டத்தை சிறந்த முறையில் அமுல்படுத்துவதை கண்காணிக்க அமைச்சரவை உப குழு ஒன்றும் நியமிக்கப்படவுள்ளதாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் தேசிய செயற்பாட்டு வேலைத்திட்டத்தின் அமுல்படுத்தல் மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பில் அடிக்கடி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவைக்கு அறிவிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

மதுபோதையிலும் காப்புறுதிப் பத்திரம் இன்றியும் மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 6 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

தர்மபுரத்தைச் சேர்ந்த நபரொருவர் 47ஆயிரத்து 250 மி.லீ. கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்தநபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 50 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 6 மாத சிறைத்தண்டனையும் வழங்கியதோடு முற்குற்றம் உள்ளதால் 6 மாத கடூழிய கட்டாய சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

உதயநகரைச் சேர்ந்த நபரொருவர் ஆயிரத்து 125 மி.லீ கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 20 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 3 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கியதோடு முற்குற்றம் உள்ளதால் 3 மாத சாதாரண கட்டாயச் சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

ஆனந்தநகரைச் சேர்ந்த நபரொருவர் 6ஆயிரத்து 750 மில்லி லீ கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பெயரில் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர் குற்றவாளியெனக் க்ண்டு 30 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 3 மாத சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

## தெய்வம் வெளியீட்டின் அதிர்ஷ்ட இலாபச் சீட்டு

தெய்வம் இலக்கிய வெளியீட்டின் வளர்ச்சிக்காக இவ்வெளியீடு நடத்தும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டின் முதலாவது சீட்டினைப் பெற்று இவ் வெளியீட்டின் தலைவரும் மு/அம்பகாமம் அ.த.க. பாடசாலையின் அதிபருமாகிய திரு.வை.விக்கினேஸ்வரன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

*நிர்வாக குழுவினர் விபரம்:-*

தலைவர்:- வை.விக்கினேஸ்வரன்-அதிபர்
செயலாளர்:- எஸ்.சுதர்சனன்-இந்து சேவா சங்கம்
பொருளாளர்:- கே.மணிவண்ணன் - அரச சார்பற்ற நிறுவனம்
ஜி.வியாசர்மணி- அரச சார்பற்ற நிறுவனம்
ஆர்.இராகவன் - வன்னி ஒலிபரப்பு சேவை
ரீ.பிரபதாபன்- வளவளத்துணையாளர்
என்.சிறிகாந்தன் - ஆசிரியர்
ரீ.ரமணன்-எச்.என்.பீ.அசூரன்ஸ்
ஏ.அஜந்தன்-ஆசிரியர்

**தெய்வம் இலக்கிய வெளியீடு**
**மனோன் இல்லம், சங்கரப்பிள்ளை வீதி,**
**ஆனைக்கோட்டை.**

(6126)

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

22

**SEPT. 2011 TO FEBRUARY 2012**

*தமிழ் மொழி மூலம்*

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
• வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
• ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2011

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது.
அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.
-மில்டன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இந்திய மத்திய அரசின் போக்கு தமிழ் நாட்டைத் தனிநாடாக்கும்

இலங்கையில் நடந்த மிக மோசமான-கொடூரமான போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச நாடுகள் பலவும் ஆழ்ந்த கவலையுற்றிருக்கும் வேளையில்-போர்க்குற்றம் தொடர்பில் நீதியான விசாரணை தேவையென வலியுறுத்தி நிற்கும் வேளையில், இந்தியா மட்டும் இலங்கையைக் காப்பாற்றுவதில் அதிதீவிரமாக ஈடுபட்டுவருவது வெளிப்படையாகிவிட்டது.

போர்க்குற்றச்சாட்டிலிருந்து இலங்கையைக் காப்பாற்றுவதற்கு சீனாவும், பாகிஸ்தானும் உதவுவது என்பதும் இந்தியா உதவுவதென்பதும் ஒத்த தன்மை உடையதல்ல.

பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளிடம் உண்மை-நேர்மை என்பவற்றை எவருமே எதிர்பார்ப்பதில்லை. இவை அநீதிக்கு துணைபோகும் நாடுகள் என்ற பட்டியலில் முதலிடம் பெறக்கூடியவை.

ஆனால், இந்தியா அப்படியல்ல. நீதிக்கு குரல் கொடுக்கக் கூடிய கொள்கைகள் இந்தியாவிடம் இருப்பதாக மக்கள் நம்பிக் கொள்கின்றனர்.

இருந்தும் இலங்கை தமிழர் விடயத்தில் இந்தியாவின் போக்கு விசித்திரமானதாகவும் வெறுப்புக்குரியதாகவும் இருப்பதைக் காணமுடிகின்றது.

இலங்கையில் நடந்த போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இந்தியா மௌனம் சாதிப்பது அல்லது அது விடயத்தில் எதையுமே அலட்டிக் கொள்ளாதது போல நடந்து கொள்வது தமிழகத்து மக்களையோ அன்றி ஈழத்தமிழினத்தையோ திருப்திப்படுத்தப் போவதில்லை.

போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இந்தியா கொண்டுள்ள நிலைப்பாடானது, இந்தியாவை சந்தேகக்கண் கொண்டு பார்க்க வைக்கின்றது. அதாவது, இலங்கையில் நடந்த போர்க்குற்றச்சாட்டில், இந்தியாவுக்கு பெரும் பங்கு உண்டு என்பது தற்போதைய முடிபு.

இதன் காரணமாகவே இலங்கை மீது அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேற்குலக நாடுகள் நடவடிக்கை எடுப்பதை இந்தியா தடுத்து வருகின்றது.

உண்மையில் வன்னியில் நடந்த மிக மோசமான போர்க் கொடூரத்தை மையமாக வைத்து, இலங்கையின் செவியில் பிடித்து அதன் தலையில் குட்டுப்போடுவது அமெரிக்காவுக்கு மிகச் சாதாரண விடயம். அதைச்செய்வதற்கு அமெரிக்கா பின்நிற்கப் போவதுமில்லை.

ஆனால் இந்தியா, இலங்கையைக் காப்பாற்றுவதில் விசேட கவனம் செலுத்தி வருகின்றது.

இதன் காரணமாகவே இலங்கையில் நடந்த போர்க்குற்ற விசாரணை செயற்பாடு எதுவுமின்றி வெறுமனே பேசு படுபொருளாக இருக்கின்றது.

எனினும் இத்தகைய நிலைமை நீண்டகாலத்திற்கு இல்லை என்பது தெளிவு.

இந்திய மத்திய அரசு தற்போது ஈழத்தமிழ் மக்களுக்கு இழைத்துவரும் அநீதியின் தாக்கம் தமிழகத்தில் தாழமுக்கமாக நிச்சயம் உருவெடுக்கும்.

இதன் விளைவு தமிழக மக்கள் தங்களுக்குத் தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பர். எட்டுக் கோடி தமிழ் மக்களின் இக்கோரிக்கையை இந்திய மத்திய அரசு சமாளிப்பது என்பது முடியாத காரியமே.

அதன் பின்னர் ஈழத்தமிழினத்தின் பிரச்சினைகள் மிகச் சுலபமாகத் தீரும்.

# வடக்கு மக்களுடன் பொலிஸார் சுமுகமான உறவுகளை பேணவேண்டியது அவசியமானது

## சிங்கள ஊடகம் சுட்டிக்காட்டு

வடக்கு பொதுமக்களுடன் பொலிஸார் சுமுகமான உறவுகளைப்பேண வேண்டியது அவசியமானது என லக்பிம பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

நீண்ட காலமாக போரின் அழுத்தங்களை நேரடியாக அனுபவித்த மக்கள் சமூகமொன்றுடன் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

வடக்கு கிழக்கில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு பிரதேச மக்கள் தொடர்பில் போதியளவு தெளிவுபடுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்களின் வாழ்வாதாரம், இந்து காலசாரம், தமிழ்மொழி, சமூகப் பிரிவில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் போன்ற சகல விடயங்கள் தொடர்பிலும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அரச ஊழியர்களுக்கும் விளக்கமளிக்க வேண்டும்.

அநேக சந்தர்ப்பங்களில் வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தண்டனை அடிப்படையில் இடமாற்றம் பெற்றவர்களாக காணப்படுகின்றனர்.

ஒழுக்கக் கேடு காரணமாக அல்லது அரசியல் தலையீடு காரணமாக இவ்வாறு தண்டனை இடமாற்றம் பெற்று வடக்கு கிழக்கில் கடமையாற்ற அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தண்டனை இடமாற்றம் பெற்றுச் சென்று கடமையாற்றும் உத்தியோகத்தர்களிடம் காத்திரமான சேவையை எதிர்பார்க்க முடியுமா என்பது கேள்விக்குறியாகும் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முறையான பயிற்சி பெற்ற, அனுபவமிக்க உத்தியோகத்தர்களை கடமையில் ஈடுபடுத்துவதே பொருத்தமாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றுவோரும் இந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

வடக்கு கிழக்கு வாழ் மக்களுக்கும் ஏனைய பிரதேச மக்களுக்கும் இடையில் நிலவி வரும் இடைவெளியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இந்தியப் பிரதமர் மன்மோகனுக்கு மகிந்த அனுப்பிய இரகசிய செய்தி!

## ஆராய்கின்றனர் இராஜதந்திரிகள்

(புதுடில்லி)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோன்சிங்கிற்கு இரகசிய செய்தி ஒன்றை கடந்த வாரம் அனுப்பிவைத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சிறப்புத் தூதுவராக புதுடில்லிக்கு விஜயம் செய்த பிரதி வெளிவிவகார அமைச்சர் டியூ.குணசேகர கடந்த 9ஆம் திகதி இச்செய்தியை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் நேரில் கையளித்துள்ளார்.

இதன்போது வடக்குக்கிழக்கில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் டி.யூ.குணசேகர இந்தியப் பிரதமருக்கு எடுத்துக் கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, இந்தியப்பிரதமர்மன்மோகன்சிங்கிடம் கையளிக்கப்பட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செய்தி என்ன என்பது குறித்த தகவல்கள் எதுவும் இதுவரை வெளியிடப்பட வில்லை.

ஆயினும், ஜெனிவாவில் நேற்று ஆரம்பமான ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 18 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு ஆதரவு வழங்குமாறு மகிந்த ராஜபக்ஷவால் இந்தியப்பிரதமரிடம் உத்தியோக பூர்வமாக வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கலாம் என இராஜதந்திர வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, அது குறித்த நிலைப்பாட்டை இந்தியா வெளிப்படுத்தும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா அண்மையில் கூறியிருந்தார்.

இந்நிலையிலேயே இந்தியாவின் ஆதரவை உறுதிசெய்து கொள்வதற்காக மூத்த அமைச்சர் டி.யூ.குணசேகரவை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதுடில்லிக்கு அனுப்பி வைத்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

அதேவேளை, இந்தியாவுடனான விவகாரங்களைக் கையாள்வதற்காக வழக்கமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை அல்லது வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிசை அனுப்பி வைக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம்முறை மூத்த அமைச்சர் டியூ.குணசேகரவை தெரிவு செய்துள்ளமை குறித்து கொழும்பு அரசியல் வட்டாரங்கள் ஆச்சரியம் வெளியிட்டுள்ளன. (ச-8)

# கொழும்பு-தூத்துக்குடி பயணிகள் கப்பலில் விசேட சலுகைகள்

(கொழும்பு)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் பயணத்தை மேற்கொள்ளும் ஸ்கோட்டியா பிரின்ஸ் பயணிகள் கப்பல் எதிர்வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் விசேட சலுகைகளை அறிவிக்கவுள்ளது.

குறிப்பிட்ட மாதங்களில் அதிகளவான பயணிகள் இந்தக் கப்பலில் பயணிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக கப்பல் நிறுவன பொது முகாமையாளர் பி.ஏ.பொன்னப்பா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகளை வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு மீள்குடியேற்றத்துக்காக அழைத்து வருவது தொடர்பாக அகதிகளுக்காக ஐக்கிய நாடுகள் சபையுடன் பேச்சு நடத்தப்படுகிறது.

அத்துடன் மாணவர்களுக்கான கல்வி சுற்றுலா தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பலில் பயணிப்போரில் 20 வீதமானவர்கள் வர்த்தகர்களாவர். அத்துடன் தென்னிந்தியாவில் இந்தக் கப்பல் சேவைக்காக சுமார் 100 முகவர்கள் செயற்படுவதாகவும் இலங்கையில் 20 முகவர்கள் செயற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மானிடன் தெய்வமாதல்



தூய்மையுடன் இரு, தன்னலமற்று இரு இதுவே சமயமாம். என் அருமைக் குழந்தைகளே! சமய வாழ்வின் உட்பொருள் கொள்கைகளில் இல்லை. நடைமுறையில் தான் உள்ளது. நல்லவனாக இருப்பது, நல்லதைச் செய்வது இதில் தான் சமயத்தின் முழுத்தன்மையும் அடங்கியுள்ளது. இறைவா! இறைவா! என்று கதறி அழைப்பதில், அழுவதில் சமயம் இல்லை, இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதில், அவன் விரும்பிய வண்ணம் நடந்து கொள்வதில் தான் சமயம் உள்ளது.

இங்குக் கூடியிருக்கும் நீங்கள் அனைவரும், நல்ல இளைஞர்கள் சேர்ந்துள்ள கூட்டமாகும்! உங்களின் பெரும்பாலானோர் நீங்கள் பிறந்த பொன்னாட்டிற்கு நல் ஆபரணமாய், உங்கள் தாய்த்திருநாட்டிற்கு அதன் தவப்பயனாய் விளங்கப் போகிறீர்கள். அந்தப் பொன்னான காலம் வெகு தொலைவில் இல்லை. இதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

அவ்வப்போது உலகத்தினிடமிருந்து உங்களுக்குப் பலமான அடி கிடைக்கலாம். அதற்காக மனம் குலையக் கூடாது. கணநேரத்தில் அது சரியாகிவிடும். எல்லாமே சரியாகிப் போகும்.

# ஒரிசாவில் மழை, வெள்ளம் 11 இலட்சம் பேர் பாதிப்பு



(புவனேஷ்வர்)


இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் மழை வெள்ளம் காரணமாக 19 மாவட்டங்களைச் சேர்ந்த 11 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எட்டு பேர் பலியாகியுள்ளனர். மூன்று பேர் காணாமல் போயுள்ளனர். மாநில அரசு போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

ஒரிசா மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. அங்குள்ள ஆறுகளில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. மகாந்தி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஹிராகுட் அணை நிரம்பி வழிகின்றது. அணையில் இருந்து உபரி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் மகாநதி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

மழை, வெள்ளம் காரணமாக அம்மாநிலத்தில் 19 மாவட்டங்களைச் சேர்ந்த 11 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மழை வெள்ளத்திற்கு இதுவரை எட்டு பேர் பலியாகியுள்ளனர். மூன்று பேர் காணாமல் போயுள்ளனர். தாழ்வான பகுதிகளில் வசித்த மக்கள் 61 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வெள்ளத்தில் சிக்கியவர்கள் படகுகள் மற்றும் ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்கப்பட்டு வருகின்றனர். மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை ஒடிசா மாநில அரசு போர்க்கால அடிப்படையில் செய்து வருகிறது. 152 வெள்ள நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# மூவரையும் விடுவிக்க அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்

## கருணாநிதி தெரிவிப்பு



உடனடியாக அமைச்சரவையை கூட்டி 3 பேரின் தூக்கு தண்டனையை இரத்து செய்வதற்கான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

சாந்தன், பேரறிவாளன், முருகன், நளினி என்றிருந்த நால்வரில் நளினிக்கு தூக்குத் தண்டனையை தி.மு.க. அரசு ஆயுள் தண்டனையாக மாற்றுவதற்கான முறையான ஏற்பாடுகளைச் செய்தது. இன்றைக்கும் நமக்கு மன ஆறுதலையும் தருகிறது.

ஒரு பெண் என்பதாலும் மற்றும் ஒரு குழந்தையின் தாய் என்பதாலும் நளினிக்குக் கிடைத்துள்ள அந்தச் சலுகை விரிவுபடுத்தப்பட்டு இருபதாண்டு காலத்திற்கு மேலாக ஏறத்தாழ ஆயுள் தண்டனை கைதிகளைப் போல சிறையிலே இருந்து வாடிய சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகிய இவர்களை தொடர்ந்து கைதிகளாவே இருந்திடச் செய்யாமல் அவர்களை விடுவித்திடவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும், கருணை காட்டப்பட வேண்டும், அவர்கள் மீதான குற்றம் மிகப்பெரியது என்ற போதிலும் அவர்கள் அனுபவித்த தண்டனைக்காலத்தை மனதிலே கொண்டு மனிதாபிமானத்தோடு இரக்கம்காட்ட முன்வர வேண்டும் என்று ஏற்கனவே நான் கூறியிருக்கிறேன். இப்பொழுதும் அதையே கூறுகிறேன்.

இன்றைய தமிழக அரசும் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியதோடு கடமை முடிந்து விட்டதாகக் கருதாமல் மனித நேயத்தோடு பிரச்சினையை உண்மையிலேயே அணுக வேண்டுமானால் அதற்குரிய விதிமுறைப்படி ஏற்கனவே தி.மு.க.அரசில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைப்படி உடனடியாக அமைச்சரவையைக் கூட்டி அதிலே இந்த மூவரின் தூக்குத் தண்டனையை இரத்து செய்வதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி அந்தத் தீர்மானத்தை ஆளுநருக்கு அனுப்பி வைத்து அவர்களை விடுவிக்க ஆவன செய்ய வேண்டும் என அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# பெற்றோரை சந்திப்பதற்காக ஹரித்ராவுக்கு விரைவில் விசா

வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ராஜீவ் படுகொலை வழக்கின் கைதிகளான முருகன், நளினி ஆகியோரைச் சந்திப்பதற்கு அவர்களது ஒரே மகள் ஹரித்ராவுக்கு மிக விரைவில் விசா வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நளினி சில நாட்களுக்கு முன் மீண்டும் வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார். அதனையடுத்து கடந்த 7 ஆம் திகதி நளினியும் முருகனும் சந்தித்துப் பேசிக் கொண்டார்கள்.

இந்நிலையில் லண்டனில் இருக்கும் [illegible]ளி, முருகன் தம்பதியின் மகள் ஹரித்ரா [illegible]து பெற்றோரைச் சந்திக்க விரும்புவதாக [illegible]வித்துள்ளார். அதற்கான விசாவுக்கும் [illegible]ணப்பித்துள்ளார். விசா கிடைத்ததும் இந்தியா வந்து தனது பெற்றோரைச் சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளார் என்றும் தெரியவரு[illegible]றது. (ஸ்ரீ-2)

# சொத்துக் குவிப்பு வழக்கில் நேரில் ஆஜராகிறார் ஜெயலலிதா

(சென்னை)

சொத்துக் குவிப்பு வழக்கில் தமிழக முதல்வர் ஜெயலலிதா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக உச்சநீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. இது தொடர்பான உத்தரவைப் பிறப்பித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தல்வீர் பந்தாரி மற்றும் தீபக் வர்மா ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழு முதல்வர் ஜெயலலிதா வுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவது உள்ளிட்ட சூழலை ஆய்வு செய்ய வேண்டும் என பெங்களூர் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டது.

முதல்வர் ஜெயலலிதா நேரில் ஆஜரவதற்கு பிறப்பிக்கப்பட்ட பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து அவர் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

பெங்களூர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராவதில் இருந்து விலக்களிக்க மறுத்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், முதல்வர் ஜெயலலிதா நீதிமன்றத்தில் ஆஜராவதிலிருந்து விலக்களிக்குமாறு கூறுவது வழக்கை தாமதப்படுத்தும் முயற்சி என்று குறை கூறியது.

அதேநேரத்தில் முதல்வர் ஜெயலலிதாவுக்கு உரிய பாதுகாப்பு வழங்க பெங்களூர் நீதிமன்றத்துக்கு உத்தரவிடலாம் என்று நீதிபதிகள் தெரிவித்தனர். மேலும் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராவதற்கான தினத்தை மனுதாரரே தேர்ந்தெடுத்துக் கொள்ள வழி வகுக்க முடியும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக முதல்வர் ஜெயலலிதா தரப்பில் இருந்து ஒரு வாரத்துக்குள் தகவலைப் பெற்றுத்தருமாறு அவரது வழக்கறிஞருக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்த நிலையில் முதல்வர் ஜெயலலிதாவின் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை நேற்று மீண்டும் நடைபெற்றது.

அப்போது பெங்களூர் நீதிமன்றத்தில் முதல்வர் ஜெயலலிதா நேரில் ஆஜராவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக அவரது வழக்கறிஞர் நீதிபதிகளிடம் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து சொத்துக் குவிப்பு வழக்கில் ஒக்டோபர் 20ஆம் திகதி முதல்வர் ஜெயலலிதா பெங்களூர் நீதிமன்றத்தில் ஆஜராக நீதிபதிகள் உத்தரவிட்டனர். (ஸ்ரீ-4)

# பாரதச் செய்திகள்

# லோக்பால் மசோதாவுக்கு எதிரான எம்.பி.க்களுக்கு வாக்களிக்க வேண்டாம்

## அன்னா ஹசாரே வேண்டுகோள்




பாராளுமன்றத்தில் லோக்பால் மசோதாவுக்கு எதிராக பேசிய எம்.பி.க்களின் வீடு முன் தர்ணா நடத்த வேண்டும் என்றும் அவர்களுக்கு அடுத்த தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என்றும் அன்னாஹசாரே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஊழல்வாதிகளை தண்டிக்க கடுமையான சட்டம் கொண்டு வருமாறு காந்தியவாதி அன்னாஹசாரே போராட்டம் நடத்தி வருகிறார். இது தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் நடந்த போது ஜனலோக்பால் மசோதாவுக்கு எதிராக பல்வேறு கட்சிகளை சேர்ந்த சில எம்.பி.க்கள் பேசினார்கள். இந்த சூழ்நிலையில் அன்னா ஹசாரேயின் சொந்த ஊரான மராட்டிய மாநிலம் ராலேகான் சிற்றியில் ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் உயர் மட்ட குழுக் கூட்டம் நடந்தது.

இரண்டு நாட்கள் நடந்த அந்த கூட்டத்தில் அன்னாஹசாரே, அரவிந்த் கெஜ்ரிவால், பிரசாந்த்பூஷண் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அந்த கூட்டத்துக்கு பின்னர் அன்னா ஹசாரே கூறியதாவது,


கடுமையான விதிகளை கொண்ட ஜன லோக்பால் மசோதாவுக்கு எதிராக பேசி வரும் எம்.பிக்களை தொலைக்காட்சிகளில் பார்த்து பொதுமக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். அவர்களின் வீடுகளை முற்று கையிட்டு அமைதியான வழியில் தர்ணா போராட்டம் நடத்துங்கள். வீடுகளின் முன்பு பஜனை பாடல்கள் பாடி அமைதி போராட்டத்தில் ஈடுபடுங்கள்.

அரசு கொண்டு வந்துள்ள லோக்பால் மசோதா, மோசடியானது அந்த மசோதா சட்டமானால் ஊழல் அதிகரிக்கும். ஜன லோக்பால் மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எம்.பி.க்கள் அடுத்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டால் அவர்களுக்கு யாரும் வாக்களிக்க வேண்டாம். இது தொர்பாக மக்களிடம் விளக்குவதற்காக அடுத்த மாதம் முதல் நாடு தழுவிய யாத்திரை மேற்கொள்ள இருக்கிறேன் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)



ஜனலோக்பால் மசோதா தொடர்பாக தன் சொந்த ஊரான ராலேகான் சிற்றியில் முக்கிய ஆலோசனை நடத்திய அன்னா ஹசாரேவை அப்பகுதி மக்கள் ஆர்வத்துடன் சூழ்ந்து கொண்டு கைகுலுக்குவதைப் படத்தில் காணலாம்.

# மழையால் தப்பியது இலங்கை அணி



இலங்கை -அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நேற்று வெற்றி தோல்வியின்றி முடிபுற்றது.

இலங்கைக்கு வந்துள்ள அவுஸ்திரேலிய அணி இரண்டு இருபது-20 போட்டிகள், 5 ஒருநாள் போட்டி மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இதில் காலி சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 125 ஓட்டங்களால் வெற்றியீட்டி 1-0 என முன்னிலை வகித்தது.

இந்நிலையில் 2-வது டெஸ்ட் போட்டி கடந்த 8-ம் திகதி வியாழக்கிழமை பல்லேகல சர்வதேச விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

இதில் முதல் இன்னிங்சில் இலங்கை அணி 174 ஓட்டங்களை எடுத்தது.

இதில் இலங்கை அணி சார்பாக அதிக பட்சமாக மத்யூஸ் 58 ஓட்டங்களையும், சங்கக்கார 48 ஓட்டங்களையும் எடுத்தனர். மற்றைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களையே எடுத்து ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய வீரர்கள் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். மார்ஷ் மற்றும் ஹசி ஆகியோர் சதமடித்து அசத்தினர். இதே வேளை மூன்றாம் நாளில் மழையால் போட்டி நிறுத்தப்பட்ட போது அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட் இழப்பிற்கு 411 ஓட்டங்களை எடுத்திருந்தது.

**ஆஸி டிக்ளேர்**

நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. அவுஸ்திரேலிய அணி தனது முந்தைய நாள் ஓட்ட எண்ணிக்கையுடன் முதல் இன்னிங்ஸை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

இதனால் 237 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

இரண்டாவது இன்னிஸ்ஸில் இலங்கை வீரர்கள் ஓரளவு நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஓட்ட எண்ணிக்கை மெதுவாக உயர்ந்தது.

சிறப்பான ஆட்டத்தை வழங்கிய பரணவிதான 55 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். இதேபோல் சங்ககார தனது 35ஆவது அரைச் சதத்தைக் கடந்தார்.

இலங்கை அணி இரண்டாவது இன்னிஸ்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 223 ஓட்டங்களை எடுத்திருந்தபோது போதிய வெளிச்சமின்மை காரணமாக நான்காம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.



இந்நிலையில் கடைசி நாளான நேற்று 14 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையிலும் 8 விக்கெட்டுகள் கைவசமுள்ள நிலையிலும் இலங்கை அணி தனது ஆட்டத்தை தொடர்ந்தது.

ஆனால் நேற்றைய ஆட்டத்தை மழை இடைக்கிடையே குழப்பிய வண்ணம் இருந்தது.

நேற்று பிற்பகல் ஆட்டத்தில் இலங்கை அணி 307 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 6ஆவது விக்கெட் வீழ்ந்தது.

இலங்கை அணி 6 விக்கெட் இழப்பிற்கு 317 ஓட்டங்களை பெற்று நெருக்கடியில் இருந்தபோது மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது.

அதன்பின் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

அப்போது இலங்கை அணி 80 ஓட்டங்களால் மாத்திரமே முன்னிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. முடிவில் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது.

இத்தொடரின் 3-வதும் இறுதியுமான போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# ஹபீஸ் சதம்: தொடரை வென்றது பாக்.


(ஹராரே)

சிம்பாவே அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் முகமது ஹபீஸ் சதம் அடித்து கைகொடுக்க பாகிஸ்தான் அணி 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 என கைப்பற்றி முன்னிலை வகிக்கிறது.

சிம்பாவே சென்றுள்ள பாகிஸ்தான் அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. முதல் போட்டியில் வெற்றி கண்ட பாகிஸ்தான் அணி 1-0 என முன்னிலை வகித்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரண்டாவது போட்டி ஹராரேயில் நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற சிம்பாவே அணித்தலைவர் பிரண்டன் டெய்லர் துடுப்பாட்டத்தை தேர்வு செய் தார்.

**மசகட்சா அரைச்சதம்**

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணிக்கு சிபண்டா (14 ஓட்டங்கள்), சிபாபா (9 ஓட்டங்கள்) ஜோடி மோசமான ஆரம்பத்தை அளித்தது. பின் இணைந்த மசகட்சா, பிரண்டன் டெய்லர் ஜோடி பொறுப்பாக ஆடியது.



மூன்றாவது விக்கெட்டுக்காக 104 ஓட்டங்களை சேர்த்த போது பிரண்டன் டெய்லர் (50) ஆட்டமிழந்தார். அபாரமாக ஆடிய மசகட்சா (68 ஓட்டங்கள்) நம்பிக்கை அளித்தார்.

அடுத்து வந்த வாலர் (12), தைபு(26) சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். சிம்பாப்வே அணி 50 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 225 ஓட்டங்கள் எடுத்தது. பாகிஸ்தான் சார்பில் சொகைல் தன்வீர் 2 விக்கெட்டுக்களையும் ஜுனாய்டு கான், சீமா ஆகியோர் தலா ஒரு விக்கெட் டையும் வீழ்த்தினர்.

**சூப்பர் ஜோடி**

எளிய இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணிக்கு முகமது ஹபீஸ், இம்ரான் பர்கத் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை அளித்தது. அபாரமாக ஆடிய ஹபீஸ் ஒருநாள் அரங்கில் தனது 3 ஆவது சதத்தை அடித்தார். இவருக்கு ஒத்துழைப்பு தந்த இம்ரான் பர்கத் ஒருநாள் அரங்கில் தனது 8ஆவது அரைச்சதத்தை அடித்தார்.

சிம்பாவே பந்துவீச்சை பதம்பார்த்த இந்த ஜோடி 42.1 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 228 ஓட்டங்கள் எடுத்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றது. ஹபூஸ் 139 ஓட்டங்களுடனும் பர்கத் 75 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். மூன்றாவது போட்டி நாளை ஹராரேயில் நடக்கிறது.

# நவநீதம்பிள்ளை முழக்கம்...

ஜெனிவாவில் நேற்று ஆரம்பமான இக்கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் தரப்பில் உரையாற்றிய அமைச்சர் மகிந்த சமரசிங்க, நவநீதம்பிள்ளையின் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சனம் செய்தார்.

தீவிர்வாதத்திற்கு எதிரான போரின் பின்னணியில் மனிதவுரிமைகளைப் பேணத் தவறிய நாடுகளுக்கு இலங்கை ஒரு உதாரணம் என நவநீதம்பிள்ளை குற்றம் சுமத்திய நிலையில் இவ்விருதரப்பிற்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

தீவிரவாதத்தை எதிர்த்து மேற்கொள்ளப்படும் படை நடவடிக்கைகளின் போது அரசாங்கங்களால் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கைகள் மனிதவுரிமை விவகாரங்களை பெரிதும் பாதிக்கின்றன. போரின் போது அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மனிதவுரிமைகள் விவகாரங்களைப் பொறுத்தவரை போதாதவையாக இருந்தன.

இவை அனைத்தும் அடிக்கடி மனிதவுரிமை விவகாரங்களை பாதித்ததுடன் வித்தியாசம் மற்றும் பாகுபாட்டு கலாசாரம் ஒன்றையும் ஏற்படுத்தின. இவை வன்முறை மற்றும் பழிவாங்கல் சுழற்சிகள் ஏற்பட வழிவகுத்தன. இலங்கை அத்தகையதொரு வகையைச் சேர்ந்தது என நவநீதம்பிள்ளை கூறினார்.

அத்துடன், முப்பதாண்டுகளில் தீவிரவாதத்தினால் மட்டும் இலங்கை பாதிக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்ட அவர், அவசரகாலச் சட்டத்தை நீக்கினால் மட்டும் போதாது என்றும், பாதுகாப்பு தொடர்பான அனைத்துச் சட்டங்களையும் அரசாங்கம் மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

**சமரசிங்க விமர்சனம்**

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் கருத்துக்களை மகிந்த சமரசிங்க கடுமையாக விமர்சனம் செய்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மகிந்த சமரசிங்க உரையாற்றும் போது, நிபுணர்கள் குழுவின் அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு கையளிக்க செயலாளர் நாயகம் பான் கீ மூனின் அலுவலகத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இம்மாதம் 9ஆம் திகதி மனித வுரிமைகள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக அறிந்தோம்.

உங்களுடன் இடம்பெற்ற முன்னைய கலந்துரையாடலின் போது நிபுணர்கள் குழுவின் அறிக்கையை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு கையளிப்பது குறித்து நேரடியாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இதை ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 29 அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் தெரிந்து கொள்ள நேர்ந்தமை என்பது உங்களுக்கும் எனக்கும் அசௌகரியமானதாகும் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இதனிடையில், இக்கூட்டத் தொடரில் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் தரப்பில் உரையாற்றிய அமைச்சர் மகிந்த சமரசிங்க, நியாயமற்ற குற்றச்சாட்டுகளை மீண்டும் மீண்டும் கூறுவதை சர்வதேச சமூகம் நிறுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் உருவாக்கும் புதிய இலங்கைக்கு விரோதமான சில குழுக்கள் அல்லது தனிநபர்களினால் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்படுகின்ற நியாயமற்ற பரப்புரைகளை, தம்மிடமுள்ள அனைத்து சக்தியையும் பயன்படுத்தி வெற்றி கொள்வோம் எனவும் அவர் தனதுரையில் குறிப்பிட்டுள்ளார்.

நாம் பெருமளவு முன்னேற்றம் அடைந்துள்ளோம். எமது அனைத்து நண்பர்களுடனும் திறந்த மனதுடனும் பரஸ்பர மதிப்புடனும் இணைந்து செயற்படுவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளோம் என்பதையும் நியாயமான எண்ணம் கொண்ட எந்த நபரும் ஏற்றுக் கொள்வர்.

இவற்றுக்கான பிரதியுபகாரமாக எமது நல்லெண்ணத்தை நிரூபிப்பதற்கான வாய்ப்பை எமக்கு வழங்குமாறு நாம் கோருகிறோம் எனவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க தனதுரையில் தெரிவித்துள்ளார். (ச-8)

## வடக்கில்...

இது ஏனைய நாடுகளை போன்றே அது தேவையெனவும் நாம் கூறினோம் என அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

இதேவேளை இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ள ரொபேர்ட் ஓ பிளேக் அரச மற்றும சிவில், சமூக பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவராலயம் தெரிவித்தது. யாழிலிருந்து கொழும்பு திரும்பும் ரொபேர்ட் ஓ பிளேக், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸை புதன்கிழமை சந்திக்கவுள்ளார். (ச-8)

## பிளேக்குடனான...

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இச்சந்திப்பு மிகவும் திருப்திகரமானதாக அமைந்ததாக குறிப்பிட்டுள்ள சம்பந்தன், ரொபேர்ட் ஓ பிளேக்கும் இச் சந்திப்பு தொடர்பில் திருப்தி வெளியிட்டதாக கூறியுள்ளார். (ச-8)

## தீர்த்தத்து...

மணியளவில் நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருந்த இவர், மக்கள் பாவனைக்கு நிர்ணயிக்கப்பட்ட எல்லையைத் தாண்டி சென்றபோது திடீரென ஏற்பட்ட சுழிக்குள் அகப்பட்ட நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

அங்கு நின்ற கடற்படையினர் குறித்த இளைஞனின் சடலத்தை மீட்டு வல்வெட்டித் துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-8-2-24-35)

## பிரான்ஸில்...

அதிகமாக அணுசக்தியில் தங்கியிருக்கும் நாடாக பிரான்ஸ் உள்ளது. கடந்த மார்ச் மாதம் ஜப்பானின் புகுசிமா அணு உலை பூகம்பத்தினால் பாதிக்கப்பட்டதையடுத்து பிரான்ஸ் தனது 58 அணு உலைகளில் சோதனைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-8)

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.

MAHARAJA FOOD PRODUCT
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha,
Wellawathte.
T.P:-0112360926,0112259849

கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே
யாழ்ப்பாணம்
aramex delivery unlimited
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825

உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com



SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், பட்டதாரிகள், வெளிநாடு செல்வோர், இளைஞர், யுவதிகளுக்கான
புதிய பிரிவு ஆரம்பம் - 13.09.2011 - செவ்வாய்
பிரிவு 1 : காலை 8.00 - 9.30 பிரிவு 2 : காலை 9.30 - 11.00
பிரிவு 3 : மாலை 3.00 - 4.30 பிரிவு 4 : மாலை 4.30 - 6.00
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

இடமாற்றம்
இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜுவல்லறி
ஸ்தாபனம் 10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : - 021 222 4134
(சி-4418)

A/L பரீட்சையினை நிறைவு செய்த மாணவர்களே!
பரீட்சையின் பின்...?
49 வருடங்கள் மக்களுக்கு
தரமான சேவையினை வழங்கிக்கொண்டிருக்கும்
ஸ்ரீலங்காஇன்ஷூரன்ஸ்
கிளிநொச்சி மாவட்டத்தில்
மாணவர்களாகிய உங்களுக்கு
•தலைமைத்துவம் தொடர்பான பயிற்சி.
•இலவச கணனிப் பயிற்சி.
•பயிற்சி நெறியின் முடிவில் அரச உத்தரவாத சான்றிதழ்.
இதில் தெரிவு செய்யப்படும் மாணவர்களிற்கு எமது நிறுவனத்தின் பல கிளைகளில் வேலை வாய்ப்பு.



பங்குபெற விரும்பும் மாணவர்கள் தங்களின் சுயவிபரக் கோவையினை பின்வரும் முகவரிக்கு எதிர்வரும் 30.09.2011 ற்கு முன் அனுப்பவும்.
முகாமையாளர்,
ஸ்ரீலங்காஇன்ஷூரன்ஸ்,
A9 வீதி, கிளிநொச்சி.
"அரச காப்புறுதி தரும்
ஓர் அரிய சந்தர்ப்பத்தினை தவற விடாதீர்கள்"

NIBM
BUILDING COMPETENCIES
யாழ்ப்பாண மாணவர்களின்
ஆர்வத்திற்கும்
நம்பிக்கைக்கும் NIBM தலை சாய்க்கிறது
இணையும் மாணவர்கள் அனைவருக்கும் இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் விசேட புலமைப்பரிசில் காத்திருக்கிறது
அனுமதிகளுக்கு முந்துங்கள்
Limited seats only
அரச சான்றிதழுடனான
Certificate course in Computer Science - Week days / Week ends
Certificate course in English Language - Week days / Week ends
Certificate course in Business Management - Week days
அனுமதிகளுக்கான கடைசி நாள் - 18-09-2011 ஞாயிற்றுக்கிழமை
077 071 6974 , 021 222 0360
இல 40 கல்லூரி வீதி
(யாழ் இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக)
யாழ்ப்பாணம்.
offer Extended

After A/L?
Government Schol.
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
Multimedia_USA
FIT University of Colombo-ucsc Rs.10,000 off
CIMA-UK
Per Level Rs.14,400
Batch i : Sat 7.30-2PM
Batch ii : Sun 2-5.30PM
Batch iii : Mon- Fri 9 AM- 2 PM
Engineering-USA 80% off
Batch i : Sat & Sun 10 - 12PM
Batch ii : Sat & Sun 4 - 6PM
Batch iii : Mon- Fri 8 AM -10 AM
BIT University of Colombo-ucsc
Per year Rs.20,000 (Sem 1 & 2)
Batch i : Sat & Sun 8 - 12PM
Batch ii : Sat & Sun 2 - 6PM
Batch iii : Mon- Fri 4.30-5.30 PM
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
இலவச முன் பதிவுகளுக்கு இன்றே உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
Free Course fee : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Oracle Java, ICDL,
MCS
Diploma Courses.. *MsOffice, AutoCAD, *Web Designing
Free Course fee* *Hardware *Accounting *DTP *English
Supported By UNDP/JRRP
www.mcsitcampus.org
324,Palaly Road, Campus Junction,Jaffna.
கற்கை நெறி ஒன்றைப் பயிலும் மாணவர்கள் மற்றைய 5 கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.
இலங்கை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.

# மரண அறிவித்தல்

## பாஸ்டர் ஜோய் பிச்

இலங்கை பெந்தெகொஸ்தே சபையின் தலைவரும், சர்வதேச இணை பிரதி தலைமை பாஸ்டருமான ஜோய் அலங்காரராஜா பிச் அவர்கள் கடந்த ஞாயிறு 11.09.2011 ஆம் திகதி மகிமைக்குள் பிரவேசித்தார்.

இவர் காலஞ்சென்ற திரு.ஜோவேல் ரட்ணராஜா பிச், காலஞ்சென்ற திருமதி ஹரியட் ஞானரட்னம் பிச் அவர்களின் புதல்வனும், கிறிஸ்டபள் தேவதஞ்சி, லிலி நேசரஞ்சினி, சயனியா புஸ்பரஜோதினி, லயனல் தனபால் ஆகியோரின் சகோதரனும், போல் சந்திரகுமார், ஜெனட் ஷாமினி ஆகியோரின் மைத்துனரும், நிகோலா, ஜெசிக்கா, கிறிஸி ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் சாட்சி கூட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை(13.09.2011) மு.ப. 8.00 மணிக்கும் பி.ப. 4.00 மணிக்கும் இல. 11, ரொட்ரிகோ பிளேஸ், மட்டக்குளியிலுள்ள இலங்கை பெந்தெகொஸ்தே சபை தலைமையகத்தில் நடைபெறும். பின்பு அடக்க ஆராதனை நாளை 14.09.2011 திகதி புதன்கிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக தனத்தையிலுள்ள பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: இலங்கை பெந்தெகொஸ்தே சபை,
இல.111, கண்டி வீதி,சுண்டிக்குளி.
(6132)
தொலைபேசி :021 2222339 / 0777730403

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.